2017 பெப்ரவரி 15
புதன்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ஜ.அவ்வல் பிறை 17 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 027

NAVAMANI DAILY நவமணி දිනපතා
# நவமணி
தமிழ் ... ன் சுதந்திரமான குரல்


QD / 154 / NEWS / 2017



09 » எல்லாம் போச்சே



13 தான் இறுதித் தீர்வாம் 04 »



பாக். வீரர் நஸீர் ஜெம்ஷீட்டுக்கு போட்டித் தடை 12 »

## மசூறா அடிப்படையில் தீர்மானம் எடுங்கள்

### ஹக்கீமிடம் உலமாக்கள் கோரிக்கை

கட்சியில் சிரேஷ்ட உறுப்பினர்களை பின்தள்ளி புதியவர்களை முன்னிலைப் படுத்தும் நிலைமையினாலேயே முரண்பாடுகள் தோன்றுவதாகவும், கட்சியின் நலன் கருதி அவ்வாறான செயற்பாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உலமாக்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் ஏற்பட்டுள்ள

11 »»»»

## சொத்துக் குவிப்பு விவகாரம்:

# சசிகலாவுக்கு 4 ஆண்டு சிறை:

### ரூ.10 கோடி அபராதம்

### சரணடைய 4 வார கால அவகாசம் கோருகிறார்



சொத்து குவிப்பு குற்றச்சாட்டுக்காக 4 வருட சிறை தண்டனை விதிக்கப்பட்ட அதிமுக தலைவி சசிகலா தீர்ப்பு தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கை முன்னெடுக்க 4 வாரகால அவகாசம் தருமாறு உச்ச நீதிமன்றத்திடம் கோரியுள்ளதாக நேற்று கடைசியாகக் கிடைத்த செய்தி தெரிவிக்கின்றது.

முழு தமிழ் நாட்டையும் பெரும் குழப்பத்துக்குள்ளாக்கியுள்ள உயர் நீதிமன்ற தீர்ப்பு சசிகலாவின் முதலமைச்சராகும் கனவை சிதறடிக்கச் செய்துள்ளது.

மறைந்த தமிழக

11 »»»»

## பிரதமர் ரணிலுக்கு ஆஸி. இல் கௌரவம்

அவுஸ்திரேலியாவிற்கு நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அந்நாட்டின் டெக்கின் பல்கலைக் கழகத்தினால் கௌரவ டாக்டர் பட்டம் நேற்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரம் கல்வி மற்றும் மனித உரிமையை பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளுக்காக மேற்கொண்ட பங்களிப்பிற்காக இந்த சர்வதேச கௌரவப் பட்டம் வழங்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தமது பேஷ்புக் பதிவில் தெரிவித்திருந்தார்.




## அரசாங்கம் சைடமை பொறுப்பேற்க வேண்டும்

### G.M.O.A. கோரிக்கை

■ ஆதில் அலி சப்ரி

சைடம் தனியார் மருத்துவ கல்லூரிக்கு 8 வருடங்கள் வழங்கப்பட்டும் தரத்தை

11 »»»»

## மத்தள விபத்தில்

### மூவர் கவலைக்கிடம்

ஹம்பாந்தோட்டை - மத்தள பிரதேசத்தில் இன்று காலை இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் 3 பேர் கவலைக்கிடமான நிலையில், ஹம்பாந்தோட்டை பொது மருத்துவமனையின் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

11 »»»»



## மோசே சப்டி வருகையை மீள் பரிசீலனை செய்யவும்

### இலங்கை - பலஸ்தீன் நட்புறவு சங்கம்

இலங்கை கட்டடக் கலை நிறுவனத்தின் வருடாந்த மாநாட்டுக்கு, இஸ்ரேலிய குடியேற்ற சூத்திரதாரியான மோசே சப்டியை அழைத்திருப்பதை, மீள்பரிசீலனை செய்யுமாறு, இலங்கை பலஸ்தீன் நட்புறவுச் சங்கம், இலங்கை கட்டடக் கலை நிறுவனத்திடம் கோரியுள்ளது.

இலங்கை பலஸ்தீன் நட்புறவுச் சங்கம், இலங்கை கட்டடக் கலை நிறுவனத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே, இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மோசே சப்டி

11 »»»»

## கொழும்பு குப்பைகளுக்கு காலக்கெடு



கொலன்னாவை குப்பை பிரச்சினை சம்பந்தமாக மகா சங்கத்தினரும் பொது மக்களினதும் பொறுமை தற்போது எல்லை கடந்துவிட்டது. எனவே பெப்ரவரி மாதத்தின் பின் கொழும்பின் குப்பைகளை இனி எந்த வகையிலும் கொலன்னாவையில் கொட்ட இடமளிக்கப் போவதில்லை என்று கொழும்பு

11 »»»»

## உம்றா செல்கிறார் ஹசனலி



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பொதுச் செயலாளர் எம்.ரி. ஹஸன் அலி ஒரிரு தினங்களில் உம்றா கடமையை நிறைவேற்ற

11 »»»»

## கிழக்கை வென்றெடுக்க அனைவரும் ஒன்றுபடுவோம்

### அமைச்சர் றிஷாத் அழைப்பு




■ சுஐப். எம் காசிம்

முஸ்லிம்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான பாதுகாப்புக்கவசமாகவும் முக்கிய கேந்திரமாகவும் விளங்கும் கிழக்குமாகாண ஆட்சி நமது கைகளுக்குள் வருவதற்கு சமூக ஒற்றுமையே

11 »»»»

## அரிசி உற்பத்தியாளர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் நெல் உற்பத்தியாளர்களுக்கு இடையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

நெல்லுற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், அரிசி ஆலை உள்ளிட்டவர்கள் மற்றும்

11 »»»»



புற்று நோயால் பதிக்கப்பட்ட கபில என்ற இளைஞனுக்கு சத்திரசிகிச்சைக்காக நேற்று ஜம்இய்யதுஷ்ஷபாப் மற்றும் மகாபோதி சங்கத்தினால் பண உதவி வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். படத்தில் இலங்கை மகாபோதி சங்கத்தலைவர் பானகல உபதிஸ்ஸ தேரர், மௌலவி எம்.எஸ்.எம். தாஸீம் ஆகியோரை காணலாம்.

## ரதன தேரர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

### வெள்ளியன்று இறுதி முடிவு



■ அ. அருண் பிரசாந்த்

பாராளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரதன தேரருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது

11 »»»»

## ட்ரம்பின் பாதுகாப்பு ஆலோசகர் இராஜினாமா

அமெரிக்க 45-வது அதிபராக பதவியேற்றுள்ள டொனால்டு டிரம்ப், பதவியேற்புக்கு முன்பே, தனது தலைமையிலான மந்திரிசபை மற்றும் நாட்டின் முக்கிய துறைகளுக்கான தலைமை அதிகாரிகளை முன்கூட்டியே நியமித்திருந்தார். இவர்களில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் பிளினும் ஒருவர்.

11 »»»»

# பணிப்பாளர் மன்சூரை வெளியேற்றக்கோரி 2ஆவது நாளாகவும் மூதூரில் ஆர்ப்பாட்டம்

**(கிண்ணியா சஹ்றின். எம். இஸ்மத்)**

மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் எம் கே .எம். மன்சூரை இடமாற்றம் செய்யக்கோரி இரண்டாவது நாளாகவும் நேற்றையதினம் ஆர்ப்பாட்டம் மேற் கொள்ளப்பட்டது.

மூதூர் நகரப் புற பாடசாலைகள் பல மூடப்பட்டுள்ள நிலையில் அங்கு கடமையாற்றும் அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட பொதுமக்களும் இவ் ஆர்ப்பாட் டத்தில் கலந்து கொண்டனர்.

இதே வேளை கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபானியை கிழக்கு மாகாண முன்னால் முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் சந்தித்து இவ்விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை கடந்த 7 ஆம் திகதி மூதூர் அல்-ஹிலால் மத்திய கல்லூரி யில் இடம் பெற்ற கூட்டத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர், ஆசிரியர்களுக்கு தொழுகைக்கான நேரம் வழங்கவில்லை யெனவும், இது பற்றி பிரஸ்தாபித்த போது தொழுகை முக்கியமில்லை , படிப்புதான் முக்கியம், மற்றும் படிக்கிற மாணவர்களுக்கு மட்டும் படிப்பிக்க




வேண்டும், படிக்காத மாணவர்களுக்கு படிப்பிக்க வேண்டாம், அவர்களை கைவிடவும், எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. தி/ மூதூர் அல்-ஹிலால் மகா வித்தியால யம், தி/ மூதூர் அந்தோனியார் மகா வித்தியாலய ஆசிரியர்களும், மாணவர்களும் , மூதூர் பிரதேச பாட சாலை அதிபர்களும், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும் பாடசாலைக்கு சமூகமளிக் காது பகிஷ்கரிப்பு செய்து, பாடசாலை முன்றலிருந்து ஆரம்பமாகி வலயக் கல்வி பணி மனை வரை சென்று கோஷங்களை எழுப்பினர்.

இதன் போது கல்விப் பணிப்பாளருக் கெதிராக பின் வரும் சுலோகங்களையும் காணக் கூடியதாக இருந்தது. திறமையான மாணவர்களுக்கு மட்டும் பாடசாலை என்றால் பாடசாலை எதற்கு, எங்கள் கல்வியை களங்கப்படுத்தும் கல்வி அதிகாரியே வெளியேறு, இருளுக்கு ஒளி யூட்டி அறிவுக்கு உரமூட்டும் ஆசான்க ளைப் பாதுகாப்போம், மூதூர் மக்களை அவமதிக்கும் மன்சூரே வெளியேறு போன்ற சுலோகங்களும் காணப்பட்டன.

இதனையடுத்து கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜே.எம். லாஹிர், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் ஒன்று கூடி மூதூர் வலயக் கல்வி அலுவலகத்தில் அவசர கூட்டம் ஒன்றை நடாத்தி முடிவுபெற்றுத் தருவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களிடம் தெரிவித்த போதும், வலயக் கல்வி பணிப்பாளரை இடமாற்றம் செய்யப்படும் வரையில் தாங்கள் இப்போராட்டத்தை கைவிடமாட்டோம் என அவர்கள் தெரிவித்தனர்.

## கந்தளாய் மீனவர்களுக்கு வாழ்வாதார உதவி



(மருதமுனை நிருபர்)

கந்தளாய் பிரதேச மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் உபகரணங்கள் வழங்கிய நிகழ்வு கடந்த சனிக்கிழமை கந்தளாயில் திருகோணமலை மாவட்ட பாரளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்றூப் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கைத்தொழில் வர்த்தக துறை அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவருமான றிஷாட் பதியுதீன், கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் அமீர் அலி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் துவிச்சக்கர வண்டி மற்றும் மீன் பெட்டிகளும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் டாக்டர் கில்மி , றஷ்ஷாக் ஹாஜி மற்றும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

# போதை மாத்திரை விற்பனையை வேடிக்கை பார்க்கும் பொலிஸார்

## முஜீபுர் றஹ்மான் குற்றச்சாட்டு



கொழும்பு நகரில் அதிகமாக போதை மாத்திரைகள் விற்பனை செய்யப் படுகின்றன. இந்த போதை மாத்திரைகளை விற்பனை செய்பவர்கள் யாரென்று பொலிஸாருக்கு தெரியும் ஆனால் பொலிஸார் இதுவரை எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் றஹ்மான் பொலிஸார் மீது குற்றம சாட்டியுள்ளார்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற கொழும்பு அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பொலிஸ் உயரதிகாரிகள் முன்னிலையில் முஜிபுர் றஹ்மான் இந்த முறைப்பாட்டை முன்வைத்துள்ளார்.

கொழும்பு வாழைத்தோட்ட பகுதியில் அதிகமாக போதை மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவதாகவும் பொலிஸார் தெரியாதது போல் இருப்பதாகவும் முஜிபுர் றஹ்மான் கூறியுள்ளார்.

கொழும்பு சென்ட்ரல் றோட் பகுதியில் கடந்த வாரம் 25 வயது இளைஞர் ஒருவர் இந்த போதை மாத்திரையை பாவித்ததன் மூலம் மரணமடைந்துள்ளார். இந்த சம்பவத்தின் பின்னர் கூட இந்த பிரதேச த்தில் போதை மாத்திரை விற்பனை குறைந்ததாக இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இங்கு உரையாற்றிய நிதியமைச்சர் ரவிகருணாநாயக்க, கொழும்பு நகரில் போதை மாத்திரை விற்பனையை இல்லாதொழிக்க பொலிஸார் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும், ஒரு வார காலத்திற்குள் பொலிஸார் இது தொடர்பான அறிக்கை ஒன்றை தனக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## மட்டக்களப்பு வளாகத்தில் 2000 மரம் நடும் திட்டம்



மட்டக்களப்பு, ரிதிதென்னையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மட்டக்களப்பு வளாகத்தில் இரண்டாயிரம் மரங்களை நடும் வேலைத்திட்டத்தினை மட்டக்களப்பு வளாகத்தின் தலைவரும், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சருமான எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் ஆரம்பித்து வைத்தார்.

இரண்டாயிரம் மரம் நடும் திட்டத்தின் முதலாவது மரத்தினை கடந்த ஞாயிற்றுக் கிழமை இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் நட்டி வைத்தார். மட்டக்களப்பு, ரிதிதென்னையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மட்டக்களப்பு கெம்பஸ் வளாகத்தில் சுத்தமான சுகாதாரமான இயற்கை காற்றை சுவாசிப்பதற்கும் வாழ்வதற்காகவும் இவ்வாறு இரண்டாயிரம் மரங்கள் நடப்படவுள்ளன.

மரங்களை நடுவதற்காக tree spade இயந்திரம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மரங்களை சேத மின்றி பிடுங்கி இன்னொரு இடத்தில் நடுவதற்கு பயன்படுத்தப்படும் இவ்வியந்திரம், இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளமை இதுவே முதல் சந்தர்ப்பம் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிர்ணய விலையில் நெல்லை வாங்குக விவசாயிகள் கவனயீர்ப்பு போராட்டம்






**(வாழைச்சேனை நிருபர்)**

வாழைச்சேனை கமநலசேவை பிரிவில் தற்போது பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நெல்லுக்கு அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையையும் விட குறைவான விலையில் தனியார் நெல் கொள்வனவு செய்வதை எதிர்த்து தங்களது நெல்லை அரசு நிர்ணய விலையில் வாங்க வேண்டும் என்று கோரி அப்பகுதி விவ சாயிகள் நேற்று கவனயீர்ப்பு பேரணியில் ஈடுபட்டனர்.


வாழைச்சேனை கமநல சேவை பிரிவில் உள்ள விவசாய அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு பேரணியில் தமிழ் முஸ்லிம் விவசாயி கள் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

கவனயீர்ப்புப் பேரணி ஓட்டமாவடி பிரதேச சபை முன்பு இருந்து ஆரம்பமாகி பிரதான வீதி வழியாக ஓட்டாவடி பிரதேச செயலகத்தை வந்தடைந்ததுடன் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் எம்.எம்.நௌபர் மற்றும் வாழைச்சே னை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திப்புட்டுமுன ஆகியோரிடம் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரினை விவச ாயிகள் கையளித்தனர்.

அரசாங்கம் நிரணயித்த விலையில் நெல்லை கொள்முதல் செய், அரசாங்கம் உரிய காலத்தில் நெல் கொள்முதல் செய்ய வேண்டும், முதலாளி வர்க்கத்திடம் நெல் இருக்கும் போது அதிக விலை விவசாயிகளிடம் நெல் இருக்கும் போது குறைந்த விலையா ஏன் இந்த துயரம், கல்குடா தொகுதியில் வெளிமாவட்ட நெல் கொள்வனவு வியாபாரிகள் நேரடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்ய இடமளியுங்கள், போன்ற வாச கங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் விவசாயிகள் பேரணியில் கலந்து கொண்டனர்.

விவசாயிகளிடம் மகஜரினைப் பெற்றுக் கொண்ட ஓட்டமாவடி பிரதேச செயலாளர் எம்.எம்.நௌபர் கருத்து தெரிவிக்கையில் ஏழை விவசாயிகள் பாதிப்படையாத வகையில் அவர்களது நெல் கொள்வனவு இடம் பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வேன் என்று தெரிவித்தார்.

## சாதனையாளர் விருது வழங்கி கௌரவிப்பு



கரம்பைக்குறிச்சி விரணியைச் சேர்ந்த லயின் ஜெயசங்கர் மலர் எப்.எம் நிறுவனத்தினால் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இவர் பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச்சங்கத்தின் தலைவராகவும் இலங்கை சமாதான நீதவான்கள் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப் பாளராகவும் இருப்பதுடன் பொது மக்களுக்கு விணைத்திறனான சேவையை வழங்கியமைக்காக தேசமானிய தேசபந்து, சமூகதிலகம், சமூக ஜோதி, தேதேதய தீபம்,சைவசமயம் பிரியன், சைவசமய நெறியாளன் போன்ற தேசிய ரீதியிலான பல விருதுகளைப் பெற்றுக் கொண்டவர். அத்துடன் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் அழகுத்தமிழ் எழுத்தாளரும் சிரேஷ்ட தொழிற்ச ங்கவாதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அஹதிய்யா பரிசளிப்பு விழா






**(மினுவாங்கொடை நிருபர் )**

வெல்லம்பிட்டிய - சாராஸ் கார்டன் அஹதிய்யத்துல் தாருஸ் ஸலாம் பாடசா லையின் 16ஆவது வருட விருது வழங் கும் நிகழ்வும், பரிசளிப்பு விழா வைபவ மும், கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு - மருதானை, டவர் மண்டபத் தில் அஹதிய்யாப் பாடசாலை அதிபர் மௌலவி ஏ.ஸனீர் தலைமையில் இடம்பெற்றது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி அமைச்சர் ஜனாதிபதி சட்டத் தரணி பைஸர் முஸ்தபா, பிரதம அதிதி யாகக் கலந்து கொண்ட இந் நிகழ்வில், புரவலர் ஹாஷிம் உமர் கௌரவ அதிதி யாகக் கலந்து கொண்டார். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டதுடன், அஹதிய்யாப் பாடசாலையினால் வெளியிடப்பட்ட அல் ஹிலால் - 2017 நினைவு மலர் முதற் பிரதியையும் அமைச்சரிடமிருந்து புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக் கொண்டார். மாணவிகளின் இஸ்லாமிய கலை நிகழ்ச்சி களும் இடம்பெற்றன.

## சாய்ந்தமருதில் மினி சூறாவளி

**( சாய்ந்தமருது யூ.கே. காலித்தீன்)**

அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசமான கல்முனை மாநகர சபைக் குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசத்தின் நடுத்துறை கடற்கரை பிரதேசத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட மினி சூறாவளியின் தாக்கத்தினால் ஹசனாத் பள்ளிவாசலின் குர்ஆன் மத்ரஸாவினதும், வாடிகளினதும், சில கட்டடங்களின் கூரைகளும், மற்றும் தோணிகளும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.



அவுஸ்திரேலியாவிற்கு நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பிரதமரின் பாரியாரும் அவுஸ்திரேலிய விக்டோரியா நகரில் அமைந்துள்ள ஆளுநர் லிண்டா திசோவின் உத்தியோகபூர்வ இல்லத்தில், விருந்தினர் கையொப்பமிடும் புத்தகத்தில் கையொப்பமிட்டதோடு, கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர்.

# புலம்பெயர் சமூக முதலீட்டில் வடக்கில் தனியார் மருத்துவக்கல்லூரி

வடக்கில் தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்படும் என உயர்கல்வி அமைச்சர் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

புலம்பெயர் சமூகத்தினரே இந்த மருத்துவக் கல்லூரியை அமைப்பதற்கு முதலீடு செய்தார்கள்.

எதிர்காலத்தில் நாட்டில் அமைக்கப்படவுள்ள மூன்று தனியார் மருத்துவக்கல்லூரிகளில் இதுவும் ஒன்று என்றும், இக்கல்லூரிகளை நிர்மாணிப்பது தொடர்பாக அரசு பேச்சுவார்த்தையிலீடுபட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# உயர்தர பரீட்சை விண்ணப்பங்கள் இன்றுடன் நிறைவு

கல்விப் பொதுத்தராதர பத்திர உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை இன்றுடன்(15) நிறைவடையும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

இதன்படி, பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர்களின் ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பிரத்தியேகமான முறையிலும் தமது விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் டப்ளியு,எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

இதேவேளை, இன்றைய தினததின் பின்னர் ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# இரண்டு கட்சிகள் இணைந்து நாட்டுக்கு சேவை செய்யக் கிடைத்தது பாக்கியமே

## ஜனாதிபதி கலேவெலையில் தெரிவிப்பு

(வஷக்கோட்டை ஏ.ஸீ.ஏ. முனாஸ்)

ஐ.தே.கட்சியும், ஸ்ரீல.சு. கட்சியும் இணைந்து நல்லாட்சியை அமைத்து நாட்டுக்கு சேவை செய்யக் கிடைத்தது பாக்கியமே என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



கலேவெல வெலமிடியாவ பாடசாலை முன்றலில் நடைபெற்ற வடமேல் மாகாண வாய்க்கால் வெட்டும் ஆரம்பப்பணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த ஜனாதிபதி, நான் மகாவலி அமைச்சராக இருந்த காலத்தில் குறித்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க பலதடைகள் ஏற்படுத்தப்பட்டன. எனது அமைச்சும் மாற்றப்பட்டது. விவசாயியின் மகனான எனக்கு விவசாயத்துக்கு நீர் எவ்வாறு அவசியம் என்பதை நான் உணர்வேன். இப்போது எனது கனவு நனவாகிவிட்டது.

முன்னாள் பிரதமர் டீ.எஸ். சேனாநாயக்க ஆட்சியின் போது கம்பஹாவில் இருந்து பொலன்னறுவைக்கு காணி பெற்று சென்றவர்களில் எமது தந்தையும் ஒருவர்.

எமது ஆட்சியில் எமக்கு கிடைக்கும் இலாபம் அல்லாது மக்களுக்கு கிடைக்கும் இலாபம் பற்றியே நாம் சிந்திக்கின்றோம்.

இலங்கை பிரஜைகள் அனைவரும் ஒன்றிணைந்து எமது தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என தெரிவித்தார்.

மேலும், இக்கூட்டத்தில் மத்திய மாகாண, வடமேல் மாகாண முதலமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இந்த வடமேல் மாகாண வாய்க்கால் திட்டத்தின் கீழ் சிறிய அளவு 300 குளங்களும் பெரியளவில் 8 குளங்களும் மகாவலி நீரினால் பயன்பெறுவதோடு 12500 ஹெக்டேயர் விவசாய நிலங்கள் இரு போகங்களில் நீரை பெறப்போவதோடு, இதன்மூலம் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயரவுள்ளது.

# உம்றா சென்றவர் ஜித்தாவில் மரணம்

பொலன்னறுவை கதுருவெலையிலிருந்து உம்றா கடமையினை நிறைவேற்றச் சென்ற சாயப்பா என்பவர் ஜித்தா விமான நிலையத்தில் மாரடைப்பு காரணமாக மரணமாகியுள்ளார்.

உம்றாவை முடித்து தாயகம் திரும்பும் வழியிலே அவர் மரணமாகியுள்ளார்.

# தகவல் அறியும் உரிமைச்சட்டம் பற்றிய கலந்துரையாடல்




தகவல் அறியும் உரிமை சட்டத்திற்கு சமூக கலாசாரத்திற்கு அப்பால் செல்லமுடியுமா? என்ற தலைப்பில் தேசிய ஊடக ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள விவாதம் ஒன்று இன்று மாலை 3.30 மணிக்கு கொழும்பு லக்ஷமன் கதிர்காமர் நிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெறும். பிரபல ஊடகவியலாளர் நாலக குணவர்தன, தேசிய ஊடக நிலைய ஏற்பாட்டாளர் மஸ்தான் இஸ்மாயில், அபேவிக்ரம ஆகியோர் இதில் வளவாளராக கலந்து கொள்வார்கள்.

# நுவரெலியா மாவட்டத்தில் வெளி மாணவர்கள் கற்க முடியாது

நுவரெலியா மாவட்டத்தில் வெளிமாவட்ட மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். ஏனென்றால் இது நுவரெலியா மாவட்ட மாணவர்களுக்கு மட்டும் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட ஹட்டன் ஸ்ரீபாத சிங்கள மகா வித்தியாலயத்தின் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவமும், தொழில்நுட்ப ஆய்வு கூடம் திறப்பு விழாவும் நேற்று மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் வெளிமாவட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் என்று கடந்த காலங்களில் பிரச்சினை காணப்பட்டது. ஆனால் வெளிமாவட்ட மாணவர்களுக்கு இங்கு கல்வி கற்பதற்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேஷியாவிலிருந்து இலங்கைக்கு அரிசி

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி காலநிலையால் உணவு தட்டுப்பாடைக் குறைக்கும் வகையில் இந்தோனேஷியாவிலிருந்து 5000 மெட்ரிக் தொன் அரிசியை நன்கொடையாக வழங்க இந்தோனேஷிய அரசு தீர்மானித்துள்ளது. அந்தவகையில் குறித்த அரிசி தொகையானது நேற்றைய தினம் இந்தோனேஷியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தோனேஷிய ஜனாதிபதி ஜொகோ விடோடோ விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே குறித்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## தென் மாகாணசபை கூட்டத்துக்கு

# அரிசி, தேங்காய், பருப்புடன் வந்த சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள்

நேற்று நடைபெற்ற தென் மாகாண சபைக்கூட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அரிசி, தேங்காய் மற்றும் பருப்பினை எடுத்து வந்ததனால் சபையில் சூடான வாக்குவாதம் இடம்பெற்றது.

தென் மாகாணசபையின் தவிசாளர் சோமவங்ச கோதாகொட தலைமையில் நேற்று மாகாணசபை கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

மாகாணசபை உறுப்பினர் சன்னசாலிய மெண்டிஸ் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பி வாழ்க்கைச் செலவு வானை முட்ட உயர்ந்திருப்பதாகக் குறிப்பிட்டு தேங்காய் பாதி, அரிசி மற்றும் பருப்பு, சிறிய தேங்காய் எண்ணெய் போத்தல் ஒன்றையம் எடுத்து வந்து அதனைக் காட்டி வாழ்க்கைச் செலவு உயர்ந்திருப்பதாகக் கூறினார்.

அரிசி 100 ரூபா, தேங்காய் 90, 100 ரூபா எப்படி உண்பது எவ்வாறு என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.



எதிர்க்கட்சி தலைவர் தென்னகோன் நிலமே 70 ரூபாவுக்கு அரிசி கொண்டு வந்ததாக கூறி அரிசி மூடை ஒன்றை காட்டியதும் சபையில் சூடான வாக்குவாதம் ஏற்பட்டது. எதிர்க்கட்சி தலைவர் கொண்டு வந்த அரிசி, மிருகங்களுக்கே பொருத்தமில்லை என சு.க.உறுப்பினர்கள் கூற இதனை விட சிறந்த அரிசியினை அமைச்சர் ஹரிசன் மிருகங்களுக்கு வழங்கியிருக்கின்றார் என்றும் கூறினார்.

தவிசாளர் உறுப்பினர் சன்னசாலிய சமர்ப்பித்த சிறப்புரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப இடமளிக்காததனையடுத்து சபையில் அமைதி ஏற்பட்டது.

லங்கா சதொச
LANKA SATHOSA லங்கா சதொச

தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவர்

கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு

**தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவருடன் தொழில் வாய்ப்புக்கள்**

லங்கா சதொச வலையமைப்பானது நாடு முழுவதும் 300ற்கும் மேற்பட்ட கிளைகளுடன் ரூபா.30 பில்லியன் புரள்வை கொண்ட இலங்கையின் பாரிய சில்லறை விற்பனை நிலைய வலையமைப்பாகும். நாம் எமது கீழ்காணும் குறிக்கோள்களை அடைய எதிர்பார்த்துள்ளோம்.

- வாழ்க்கை செலவை குறைத்தல்
- நாட்டு மக்களை வியாபாரங்களுடன் தொடர்புபடுத்தல்
- சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கான வியாபார கோரலை நாடு முழுவதும் கொண்டு வர வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.

இதன் அடிப்படையில் நம் இலக்குகளை அடைவதுடன் எமது வியாபார நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்த எமது கிளைகளை 500 ஆக அதிகரித்து புரள்வை ரூபா.50 பில்லியனாக அதிகரிக்கும் நோக்கில் தொழில் சார் வல்லுனர்களை கீழ் காணும் வெற்றிடங்களுக்கு எதிர்பார்க்கின்றோம்.

**முகாமையாளர் (பராமரிப்பு மற்றும் பொறியியல்)**

**வெளி விண்ணப்பதாரிகள் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் பட்டம்
அத்துடன்
முதல் பட்டத்தை பெற்றதன் பின் பதவிக்கு பொருத்தமான துறையில் மேலாளர் மட்டத்தில் குறைந்தது ஒரு வருட முன் அனுபவம்
02. ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றில் இடைநிலைமட்டத்தில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன் குறித்த துறையில் குறைந்தது ஒரு வருட முன் அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2)**

01. மேல் வெளியக விண்ணப்பதாரர்களின் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
02. பதவிக்கு குறித்த விடயத்தில் கனிஷ்ட முகாமையாளர் (JM) பதவியில் குறைந்தது 05 வருட முன் அனுபவம் மற்றும் சிறந்த சேவையை வழங்கியிருத்தல் வேண்டும்.

சம்பள குறியீடு : (MM-1-1)
சம்பளம் : ரூபா (25,640 - 3x 665 - 7x 735 - 15x 925 - 46,655 )
மற்றைய கொடுப்பனவுகள் : வாழ்க்கை செலவு கொடுப்பனவு ரூபா 7,800/- + தொலைபேசி கொடுப்பனவு ரூபா 3,000/- + போக்குவரத்து கொடுப்பனவு ரூபா 12,500/- + மேலதிக கொடுப்பனவுகள் ரூபா. 10,000/- இப்பதவிக்காக வழங்கப்படும்.

**பிரதேச முகாமையாளர்**

**வெளி விண்ணப்பதாரிகள் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட முகாமைத்துவம் அல்லது வணிகம் தொடர்பான பட்டம்
02. ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றில் இடைநிலைமட்டத்தில் குறித்த பதவிக்கு பொருத்தமான துறையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழ் குறிப்பிடப்பட்ட 1 அல்லது 2)**

01. மேல் வெளியக விண்ணப்பதாரர்களின் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
02. பதவிக்கு குறித்த விடயத்தில் MA4 வர்க்கத்திற்கு தொடர்பான பதவியில் குறைந்தது 05 வருட முன் அனுபவம் மற்றும் சிறந்த சேவையை வழங்கியிருத்தல் வேண்டும்.

சம்பள குறியீடு : (JM-1-1)
சம்பளம் : ரூபா (20,490 - 10 x 325 - 18 x 475 - 32,290 )
மற்றைய கொடுப்பனவுகள் : வாழ்க்கை செலவு கொடுப்பனவு ரூபா 7,800/- + தொலைபேசி கொடுப்பனவு ரூபா 3,000/- + போக்குவரத்து கொடுப்பனவு ரூபா 15,000/- + பிரதேச முகாமையாளர் கொடுப்பனவு ரூபா. 5,000/- ரூபா. + மேலதிக கொடுப்பனவுகள் 10,000/- இப்பதவிக்காக வழங்கப்படும்.

**நீங்கள் இத்தகைமைகளை கொண்டுள்ளீர்களெனின் உங்களுடைய சுயவிபரக்கோவையுடன், உங்கள் சான்றிதழ் பிரதிகளை இந்த விளம்பரம் பிரசுரமாகி 10 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வையுங்கள்.**
**(விண்ணப்பிக்கும் பதவியினை உறையின் மேல் இடது கை பக்க மூலையில் குறிப்பிட்டு அனுப்பவும்.)**

தலைவர்
வரையறுக்கப்பட்ட லங்கா சதொச,
இல: 108, நெக்ரிஸ் கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு-01

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
15TH FEBRUARY 2017 - WEDNESDAY

# சசிகலா சிறை சென்ற போதும் இந்துத்துவா தமிழகத்தை நெருங்கக் கூடாது

சிகலாதமிழ்நாடு அ.தி.மு.கவின் பொதுச் செயலாளர் சசிகலாவுக்கு, சிறை தண்டனை வழங்கி, நேற்று தீர்ப்பளிக்கப்பட்டதுடன், தமிழகத்தில் சமீப காலமாக ஏற்பட்டிருந்த சர்ச்சைகளின் ஓர் அங்கம் முடிவுக்கு வந்துள்ளது.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த செல்வி. ஜெயலலிதா திடீரென சுகயீனமுற்று, சென்னை அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இறந்ததன் பின்னர், தமிழக அரசியலில் சர்ச்சைகளும், சிக்கல்களும் பெருமளவில் ஏற்படத் தொடங்கின.

ஜெயலலிதாவின் மரணத்தின் பின்னர், அவரது கட்சியைச் சேர்ந்த ஓ.பன்னீர் செல்வம் முதலமைச்சராக பதவியேற்றார். அத்தோடு, ஜெயலலிதாவுக்கு பணிவிடை செய்து வந்த சசிகலா, கட்சியின் பொதுச் செயலாளராக பதவியேற்றார்.

திடீரென, அறிக்கை விடுத்த முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், தான் முதலமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்வதாக அறிவித்தார். அத்தோடு, சசிகலா முதலமைச்சராக பதவியேற்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆனால். எதுவித அரசியல் அனுபவமும், நிர்வாகப் பின்னணியும் இல்லாத சசிகலா, வெறுமனே ஜெயலலிதாவின் நெருங்கிய நண்பியாகவும், பணிவிடை செய்பவராகவும் இருந்தார் என்பதற்காக, முதலமைச்சராக பதவியேற்பதை தமிழக மக்கள் விரும்பவில்லை.

இதற்கிடையில், சசிகலா தன்னை பலவந்தப்படுத்தியே, இராஜினாமாச் செய்ய நிர்ப்பந்தித்ததாக ஓ.பன்னீர் செல்வம் மீண்டும் அறிக்கை விட்டதனால், அ.தி.மு.கவுக்குள் பெரும் பிளவு ஏற்பட்டு, ஓ.பன்னீர் செல்வத்துக்கு ஆதரவாக ஒரு குழுவும், சசிகலாவுக்கு ஆதரவாக இன்னுமொரு குழுவும் செயற்படத் தொடங்கியது. ஓ.பன்னீர் செல்வம் கட்சியிலிருந்தும் நீக்கப்பட்டார்.

இந்நிலையிலேயே, ஏற்கனவே விசாரணையிலிருந்த சொத்துக் குவிப்பு விவகாரம் தொடர்பிலான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டு, சசிகலாவுக்கு 4 வருட சிறைத் தண்டனையும், 10 கோடி நஷ்ட ஈடும், 10 வருட அரசியல் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, சசிகலா முதல்வராகும் வாய்ப்பு பறிபோயுள்ளது. அதேநேரம், ஓ.பன்னீர் செல்வம் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதால், அவருக்கும் முதலமைச்சராகும் வாய்ப்பு பறிபோயுள்ளது.

எனவே, அ.தி.மு.கவின் பழனிச்சாமிக்கு முதலமைச்சராகும் வாய்ப்பு கிட்டியுள்ளது. அவரே இப்போது அ.தி.மு.க வின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழக அரசியலில் திடீரென ஏற்பட்டிருக்கின்ற இந்த சூறாவளிச் சர்ச்சை, உண்மையில் ஒரு திட்டமிட்ட சதி என்றே அரசியல் விற்பன்னர்கள் கருதுகின்றனர். ஏனெனில், தமிழகத்தில் கால் ஊன்றுவதற்கு முயற்சித்து வரும் பா.ஜ.க. கட்சி, தமிழக அரசியலில் சர்ச்சைகளை ஏற்படுத்தி, குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக தமிழக மக்கள் கருதுகின்றனர்.

தமிழக அரசியல் சூறாவளி சர்ச்சை வெகு சீக்கிரம் முடிவுக்கு வர வேண்டுமாயின், இந்துத்துவா முகத்துடன் செயற்படுகின்ற பா.ஜ.கவினருக்கு எதிரான சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து, செயற்பட வேண்டிய தேவையுள்ளது.

அ.தி.மு.க., தி,மு.க. முதலிய பிரதான கட்சிகளும், ஏனைய செல்வாக்குள்ள சிறு கட்சிகளும் இந்த அரசியல் கொந்தளிப்பை மிகவும் சாணக்கியமாக கையாள வேண்டியுள்ளது.

தமிழக அரசியலை குழப்பிவிட்டு, தமிழ்நாட்டுடன் எந்த வகையிலும் தொடர்பில்லாத இந்துத்துவா சக்திகளை தமிழ்நாட்டில் காலூன்ற வைக்கும், பா.ஜ.கவின் முயற்சியை தமிழக மக்கள் முறியடிப்பதே, தமிழகத்தின் எதிர்காலத்துக்கு நன்று.

எனவே, சசிகலா சிறைக்கு அனுப்பப்படுகின்றபோதும், இந்துத்துவா தமிழகத்தில் நுழையாது பார்த்துக்கொள்ள வேண்டியது தமிழக கட்சிகளதும், தமிழக மக்களினதும் பொறுப்பு.

# 13 தான் இறுதித் தீர்வாம்

# ஏமாற்றமளிக்கும் அரசின் நிலைப்பாடு

**எம்.ஏ. முஹம்மட் உவைஸ்**



வடக்கு-கிழக்கு தமிழரின் பிரச்சினைக்கு நிலையான அரசியல் தீர்வை வழங்கும் முயற்சிகள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல் இடம்பெற்று வருகின்றன. இந்த ஆட்சியைப் பயன்படுத்தி காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் தமிழர் தரப்பு இந்த விவகாரத்தில் காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றது.

அரசியல் தீர்வை வழங்குவதற்கு ஏதுவாக இந்த அரசு புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வரும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ளதை நாம் அறிவோம். இந்த அரசமைப்பும் இதில் உள்ளடங்கப்பட வேண்டிய அரசியல் தீர்வும் எவ்வாறு அமைய வேண்டும் என்று அரசு மக்களிடம் அபிப்பிராயங்களையும் எடுத்து முடித்துவிட்டது.

அந்த அபிப்பிராயங்களை அரசிடம் சமர்ப்பித்துள்ள மக்கள் கருத்தறியும் குழு ஒற்றையாட்சியின் கீழ்தான் தீர்வு என்று சிபாரிசுகளையும் முன் வைத்துள்ளது.

உத்தேச அரசமைப்பை அரசு பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறிய முடிகின்றது.தமிழருக்கான அரசியல் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் அந்த உத்தேச அரசமைப்பில் உள்ளடக்கப்படும்.

இந்த அரசியல் தீர்வு தொடர்பில் தமிழர்கள் ஒரு வகையான எதிர்பார்ப்பில் உள்ளனர்.மஹிந்த அரசில் வைத்திராத நம்பிக்கையை இந்த அரசில் வைத்துக் காத்திருக்கின்றனர்.ஆனால்,அவர்களின் எதிர்பார்ப்புகள்-நம்பிக்கைகள் உரிய பலனை அடையாது என்பதை உறுதியாகக் கூறலாம்.

சமஷ்டி அடிப்படையில் இணைந்த வடக்கு-கிழக்கிற்குள்தான் தீர்வு என்ற நிலைப்பாட்டில் தமிழர்கள் உள்ளனர்.ஆனால்,அரசோ பிரிந்த வடக்கு-கிழக்கிற்குள் ஒற்றை ஆட்சி முறையின் கீழ்தான் தீர்வு என்ற நிலைப்பாட்டில் நிற்கின்றது.

இந்த நிலைப்பாடுகள் ஒருபுறமிருக்க 13ஆவது திருத்தச் சட்டம்தான் தீர்வாக முன்வைக்கப்படும் என்ற தகவலும் அரசுக்குள் இருந்து வெளிவந்து கொண்டு இருந்தது.அந்தத் தகவலை அரசு இப்போது உறுதிப்படுத்திவிட்டது.

13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தாண்டி அரசு செல்லாது என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அரசின் நிலைப்பாட்டை பாராளுமன்றில் வெளியிட்டுள்ளார்..தற்போது நடைமுறையிலிருக்கும் செத்துப் போன இந்த 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு உயிரூட்ட அரசு முற்படுமாக இருந்தால் தமிழர் தரப்பு அதை நிச்சயம் ஏற்காது என்பதை உறுதியாகக் கூற முடியும்.

13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோதே புலிகள் அதைக் கடுமையாக எதிர்த்தனர்.அந்த எதிர்ப்பையும் மீறித்தான் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டு மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது.

புலிகள் இருக்கும்வரை அந்த மாகாண சபை முறைமையை செயற்படுத்த முடியவில்லை.புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர்தான் அது இயங்கத் தொடங்கியது.

இருந்தாலும்,தமிழரின் பிரதிநிதிகளான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இது தொடர்பில் புலிகளின் நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது.

காணி,மற்றும் பொலிஸ் அதிகாரம் மற்றும் வடக்கு-கிழக்கு இணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கி சமஷ்டி அடிப்படையிலான தீர்வே தேவை என்ற நிலைப்பாட்டில்தான் கூட்டமைப்பு இருந்து வருகின்றது. இருந்தாலும்,13 ஆம் திருத்தச் சட்டம் அரசியல் தீர்வுக்கான முதல் படியென கூட்டமைப்பு நம்புவதால் அந்த முறைமையுடன் இணைந்தே கூட்டமைப்பு இப்போது பயணிக்கின்றது.ஆனால்,அதை இறுதித் தீர்வாக அக்கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை.

கூட்டமைப்பு இவ்வாறு கருதி இருக்கும் ஒரு முறைமையை இறுதித் தீர்வாக வழங்குவதற்கு அரசு முயற்சி செய்யுமாக இருந்தால் தமிழர்கள் நிச்சயம் அதை ஏற்கமாட்டார்கள். ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒன்றை மீண்டும் கொடுக்க முற்படுவது எப்படி ஆக்கபூர்வமான-நிலையான-இறுதியான அரசியல் தீர்வாக அமையும்?

அதிலும்,இப்போது இருப்பது போன்றே காணி,பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட்டால்தான் தீர்வு வழங்கப்படும் என்று அரசு கூறி வருகின்றது. அரசின் அரசியல் தீர்வு நிலைப்பாடு இதுதான் என்றால் அதை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கத் தேவை இல்லை. 1987 ஆம் ஆண்டே அந்தத் தீர்வு வழங்கப்பட்டுவிட்டது. இன்று வரை அந்த முறைமை நாடுபூராகவும் நடைமுறையில் இருக்கின்றது.நடைமுறையில் இருக்கின்ற ஒன்றை-ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒரு முறைமையை எப்படி மீண்டும் வழங்கமுடியும்?

13 ஆம் திருத்தச் சட்டம் என்பது அதிகாரங்களை வலது கையால் கொடுத்து அவற்றை இடது கையால் பறித்தெடுக்கும் ஒரு தந்திரோபாய முறைமையாகும்.மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரை வெறும் டம்மியாக இருக்க வைத்து அரசால் நியமிக்கப்பட்ட ஓர் ஆளுநருக்கு அதிகாரங்கள் வழங்கப்படும் ஒரு முறைமையயானது எப்படி ஒரு முழுமையான அரசியல் தீர்வாக அமையும்?

இனரீதியிலான பிரச்சினைக்கு முடிவுகட்டும் நோக்கில் இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று சொல்லப்படுகின்ற போதிலும்,அது இனவாதத்தை வளர்க்கும் விதத்தில்தான் செயல்படுகின்றது.

வடக்கு-கிழக்கு ஆளுநர்கள் அதிகாரமிக்கவர்களாக-முதலமைச்சர்கள் டம்மிகளாக இருப்பதும் வடக்கு-கிழக்கிற்கு வெளியே உள்ள முதலமைச்சர்கள் அதிகாரமிக்கவர்களாக-ஆளுநர்கள் டம்மிகளாக இருப்பதும் வடக்கு-கிழக்கு இனவாதத்தால் ஆளப்படுகின்றது என்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

கிழக்கு முதலமைச்சர் அண்மையில் கடற் படை அதிகாரி ஒருவர் மீது சீறிப் பாய்ந்து பெரும் சர்ச்சையை கிளப்பிய விவகாரம்கூட முதலமைச்சரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளமையால் எழுந்ததுதான்.

வெளிப்பார்வையில் 13 ஆவது திருத்தச் சட்டம் சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கும் ஒரு பொறிமுறையாகத் தெரிந்தாலும் உண்மையில்,அது பிரச்சினையை மேலும் உருவாக்கும் ஒரு பாதகமான பொறிமுறை என்பதை அதன் செயற்பாட்டை ஆய்வு செய்தால் விளங்கிக் கொள்ள முடியும்.

இந்த முறைமையை ஒரு பூரணமான - நிலையான - இறுதியான - ஆக்கபூர்வமான அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்ளமுடியாது.அதில் அதிகாரம் என்பது உண்மையில் பகிரப்படவில்லை.பகிரப்பட்டுள்ளதாகக் காட்டப்படுகின்றது.ஒரு கையால் அதிகாரத்தை வழங்கி மறுகையால் அதை பிடுங்கும் ஏற்பாடுதான் அதில் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு முறைமையை இறுதித் தீர்வாக வழங்குவதற்கு அரசு முயற்சித்தால் அதை சிறுபான்மை இன மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.அவ்வாறானதோர் எண்ணம் அரசிடம் இருந்தால் அதைக் கை விடுவதே அரசுக்கு நல்லது.

தீர்வு என்பது வடக்கு-கிழக்கு தமிழ் ,முஸ்லிம் மக்கள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து இன மக்களுக்கும் சமமான உரிமைகளை வழங்குவதாக இருக்க வேண்டும்.ஆனால்,நடைமுறையில் இருக்கும் 13 அப்படி இல்லை என்பதை நாம் கண்கூடாக கண்டே வருகின்றோம். இந்தத் தீர்வை தூசி தட்டி மீண்டும் கொடுக்கப் போனால் பிரச்சினைகள் அதிகரிக்குமே தவிர குறையாது என்பதை அரசு விளங்கிக் கொள்ள வேண்டும்.




## நாம் இதில் எந்த வகை?

வாழ்க்கையை வாழ்வதென்பதும், வாழ்க்கையை சுவைத்து வாழ்வதென்பதும் இரு வேறு விடயங்கள்.

நாம் எல்லோரும் வாழ்க்கையை வாழ்கிறோம். ஆனால், வாழ்க்கையை சுவைத்து வாழ்பவர்கள் எம்மில் அரிது என்றே சொல்ல வேண்டும்.

காலை எழுந்தது முதல் இரவு நித்திரைக்குச் செல்லும் வரையில் எதிர்நோக்கும், அலுவலக அலுவல்கள் முதல் வீட்டு விவகாரங்கள் வரை அனைத்தையும் கடமைக்காக வேண்டா வெறுப்போடு செய்பவர்கள் முதல் வகையினர்.

இவர்கள் சுவை இல்லாத வரண்டதொரு வாழ்க்கையை வாழ்கின்றனர். இவர்களது வாழ்வில் சிரிப்பு, கலகலப்பு, சின்னச் சின்ன குறும்புகள் என்று எதுவுமே இருக்காது. எப்போதும் சுடுமூஞ்சிகளாகவே இருப்பர்.

இவர்களோடு நட்பு கொள்ள யாரும் விரும்புவதில்லை. இவர்களைச் சூழ சந்தர்ப்பவாத போலி உறவுகள் நிறைந்து விடும்.

வாழ்க்கையை சுவைத்து வாழ்பவர்கள் வித்தியாசமானவர்கள். தமது அனைத்து வேலைகளையும் விருப்பத்துடன் ரசித்து சுவைத்து செய்வார்கள் இவர்கள்.

அலுவலக வேலைகளாக இருந்தால் என்ன வீட்டு விவகாரங்களாக இருந்தால் என்ன அனைத்தையும் சுவைத்து ரசித்து செய்வார்கள்.

தம்மைச் சூழ இருப்பவர்களை எப்போதும் கலகலப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருப்பார்கள். புன்சிரிப்பும் ஒளியும் இவர்களது முகங்களில் எப்போதும் இருக்கும்.

இவர்களோடு நட்பு கொள்ள அனைவரும் போட்டிபோடுவர். உண்மையான அன்பும் உறவுகளும் இவர்களைச் சூழ்ந்து கொள்ளும்.

இப்போது மனதைத் தொட்டு கேட்டுப் பார்ப்போம்: நாம் இதில் எந்த வகை?

நவமணி
NAVAMANI WEEKLY

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக் குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# மினுவாங்கொடை பிரதேசத்தில் டெங்கு தாக்கம் அதிகரிப்பு

( மினுவாங்கொடை நிருபர் )

மினுவாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 30 நாட்களில் 30 பேர், டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், டெங்கு நோய் தாக்கத்திற்குள்ளானவர்கள் நீர்கொழும்பு மற்றும் கம்பஹா வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மினுவாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

நில்பணாகொட, புருல்லப்பிட்டி, மிரிஸ்வத்த, பொல்வத்த, கல்லொழுவை, யட்டியன போன்ற பிரதேசங்களில் இந் நோயின் தாக்கம் அதிகமாக உள்ளதாகவும், கல்லொழுவை முஸ்லிம் பிரதேசத்தில் மாத்திரம் என்றுமில்லாதவாறு 12இற்கும் மேற்பட்டோர் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதி வேகமாகப் பரவும் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைத் தடுக்கும் நடவடிக்கைகள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையூடாக மேற்கொண்டு வருகின்ற போதிலும், பொது மக்களின் ஒத்துழைப்பு போதியளவு இன்மையால், நுளம்பு பெருக்கத்தை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் உள்ளதாகவும் தெரிவித்த அதிகாரி, இனிவரும் காலங்களில் படிப்படியாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும் வாய்ப்பு அதிகம் இருப்பதால், பொது மக்கள் டெங்கு நுளம்பு பெருக்கத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளில், எம்மோடு இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, டெங்கு நுளம்புகள் மேலும் பெருகுவதைத் தடுக்கும் நோக்காகக் கொண்டு, 27ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை இப்பிரதேசங்களிலுள்ள வீதிகள், தோட்டங்கள், வாய்க்கால்கள் மற்றும் நீர் நிலைகளில் மருந்து கலக்கப்பட்ட புகை விசிறப்பட்டதுடன், டெங்கு குடம்பிகள் பெருகக் கூடிய பொருட்களும் அழிக்கப்பட்டன. டெங்கு நுளம்பினால் ஏற்படும் தாக்கம் தொடர்பாக, பொது மக்களுக்கிடையில் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டன.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் பலி

(ஒலுவில் நிருபர் அமீர்)

ஒலுவில் வெளிச்ச வீட்டு பிரதான வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள் நேருக்குநேர் மோதியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகியதுடன் இரண்டு பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை ஒலுவில் வெளிச்ச வீட்டு பிரதான வீதியில் டெலிகொம் தொலைத் தொடர்பு காரியாலயத்திற்கு முன்னால் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, ஒலுவில் பிரதான வீதியை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் வெளிச்ச வீட்டு பகுதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியதில் மருதமுனை பெரிய நீலாவணையைச் சேரந்த முரளிதரன் (25) ஸ்தலத்திலேயே மரணமடைந்துள்ளார்.

மற்றைய மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்த அட்டாளைச்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்த 28 ,20 வயது மதிக்கத்தக்க இளைஞர்கள் இருவருக்கும் பலத்த காயங்களுக்கு மத்தியில் அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஒலுவில் மாவட்ட வைத்திசாலை வைத்திய அதிகாரி என். அரிந்திரன் தெரிவித்தார்.



தம்புள்ளை தொகுதி ஐ.தே.கட்சி பிரதான அமைப்பாளர் பிரியான் விஜேரத்னவால் உயர்தரப் பரீட்சையில் 3ஏ சித்தி பெற்ற 26 மாணவ, மாணவிகள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். 3ஏ சித்திபெற்று கௌரவிக்கப்பட்ட எலமல்பொத்த முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி எஸ். ராஷிதா மற்றும் கலேவல சிங்கள மத்திய கல்லூரி மாணவி எம்.எஸ்.எப். பஸ்லா ஆகியோரையும், மூத்த ஊடகவியலாளர் சீலரத்ன சேனாரத்ன மற்றும் எஸ்.சிராஜ்தீன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்: வாஹகோட்ட ஏ.சீ.ஏ.முனாஸ்)

## போதையில் வாகனம் ஓட்டிய கலால் திணைக்கள அதிகாரி கைது

(மாத்தளை எம்.எஸ்.எம். மஸாஹிம்)

மது போதையில் மோட்டர் சைக்கிள் வண்டியை ஓட்டிச் சென்ற கலால் திணைக்கள அதிகாரி ஒருவரை வரக்காபொல பொலிஸ் நிலைய போக்கு வரத்துப்பிரிவினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

இரவு வீதி போக்குவரத்து சோதனையின் போது மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனை செய்த போது குறித்த நபர் போதையில் மோட்டார் சைக்கிளை ஓட்டியதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட சந்தேகநபரை வரக்காபொல நீதிமன்றில் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.

## கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
## கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்

### பிரதி பொது முகாமையாளர் பதவி
(சந்தைப்படுத்தல் / முதலீட்டு ஊக்குவிப்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல் / முதலீட்டு ஊக்குவிப்பு) பதவிக்கான விண்ணப்பங்கள், கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**கல்வி மற்றும் தொழில் ரீதியான தகைமைகள்**
முகாமைத்துவம், பொது நிறுவனங்கள் அல்லது பொது நிர்வாகம், வர்த்தகத் துறை, பொருளாதாரம் ஆகியவற்றில் MSc / MA பட்டம் அல்லது புகழ்பெற்ற தொழில்முறை நிறுவனமொன்றில் அங்கத்துவத்துடன், பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சம்பந்தப்பட்ட துறையிலான முதற் பட்டம்.

**அனுபவம்**
தகைமைகளைப் பெற்றதன் பின்னர், அரச கூட்டுத்தாபனம், நியதிச் சபை அல்லது புகழ்பெற்ற தனியார் துறை நிறுவனமொன்றில், முகாமையாளர் தர பதவியொன்றில், குறைந்தது 15 வருட அனுபவம்

**நியமனத்தின் தன்மை**
இந்தப் பதவி நிரந்தரமானது. அத்தோடு, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய சலுகைகளுக்கு உட்பட்டதாகும்.

**சம்பள அளவு**
முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருபங்களின்படி,
HM 38,530 - 15×1100 - 55,030
அதற்கு மேலதிகமாக, அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள அரச கூட்டுத்தாபனங்களுடன் சம்பந்தப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**வயது**
35 வயதுக்கு குறைவாகவும், 55 வயதுக்கு மேற்பட்டதாகவும் இருக்கக்கூடாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருக்கின்ற விண்ணப்பதாரிகள், சுயமாக தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பங்களை, தலைவர், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02. என்ற முகவரிக்கு, 23.02.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில், பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

**தலைவர்,**
**கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்,**
**27 வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு 02**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## கேள்விமனுக் கோரல்

திகதி : 15.02.2017
கடன் இல. மற்றும் தலைப்பு : ADB கடன் இல. 3029-ஸ்ரீ;
பாரிய கொழும்பு நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ அபிவிருத்தி முதலீட்டு நிகழ்ச்சி - செயற்றிட்டம் 2
ஒப்பந்த இலக்கம் : GCWWMIIP/ADB /BUILD / TRAINING CENTER / NCB /08
தலைப்பு : தெலவலையில் முன்மொழியப்பட்டுள்ள பயிற்சி நிலையம், விடுதி கட்டடம் மற்றும் உணவகம் ஆகியவற்றை நிர்மாணித்தல்

கேள்விமனு வழங்குவதற்கான இறுதித் திகதி : 04.04.2017, மு.ப. 10:00 மணி

1. பாரிய கொழும்பு நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ அபிவிருத்தி முதலீட்டு திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) கடனை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம் பெற்றுள்ளது. இந்த நிதியின் ஒரு பகுதி மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கான கட்டணங்களுக்காகப் பயன்படுத்தப்படும்.

2. நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் சார்பாக, அமைச்சரவை நியமித்துள்ள நிரந்தர பெறுகை குழு தலைவர் , கீழே குறிப்பிடப்படும் ஒப்பந்தங்களுக்காக, தகுதிவாய்ந்த மனுதாரரிடமிருந்து, தேசிய போட்டி மனு ஊடாக, ஒற்றை நிலை இரு காகித உறை மனு செயல்முறைகளை கோருகின்றார். இந்தத் கட்டுமான செயற்றிட்டத்தில் நான்கு மாடிகள் கொண்ட பயிற்சி நிலையம், ஐந்து மாடிகள் கொண்ட விடுதி கட்டடம் மற்றும் சுமார் 9,800 சதுர மீற்றர் பரப்பு கொண்ட உணவகம் ஆகியனவும், குவியல் அடித்தளம், RCC அமைப்பு, கட்டுமான வேலைகள், செப்பனிடும் வேலைகள், கதவுகள் மற்றும் யன்னல்கள், இரும்பு சட்டக வேலைகள் மற்றும் MEP நிறுவல்களுடனான Zn/Al வளைந்த கூரை மற்றும் தட்டையான கூரைகள். ஒப்பந்தக் காலம் 18 மாதங்களாகும்.

3. மனுதாரர் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைப் பூரணப்படுத்தியிருக்க வேண்டும்.

   - மனுதாரர், வருடாந்தம் குறைந்தது, 1300 **மில்லியன்** ரூபாவுக்கான கட்டுமானப் பணிகளைக் கொண்டிருக்க வேண்டும். இது கடந்த மூன்று வருடங்களுக்குள் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்ற அல்லது மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கான சான்றளிக்கப்பட்ட மொத்த கட்டணமாகும்.
   - **கடந்த 08 வருடங்களுக்குள்,** முழுமையாக அல்லது கணிசமானளவு பூரணப்படுத்தப்பட்ட, குறைந்தது 02 ஒப்பந்தங்களில் பங்கெடுத்திருக்க வேண்டும். அத்தோடு, அவை குறைந்தது 05 மாடிகள் கொண்ட கட்டடங்களாகவும், குறைந்தது 5,900 சது மீற்றர் தரை பரப்பு கொண்டதாகவும் இருக்க வேண்டும். மேலும், மனுதாரரின் பங்கெடுப்பு **675 மில்லியன்** ரூபாவை விடவும் கூடுதலாக இருக்க வேண்டும். மனுதாரரின் பங்கெடுப்பின் ஒற்றுமை, ஆறாம் பகுதியில் தெளிவுபடுத்தப்பட்டிருப்பது போன்று, (தொழில் வழங்குநரின் தேவை மற்றும் விபரக்குறிப்புக்கள்) பௌதிக அளவு, வேலையின் தன்மை, சிக்கல், முறைமைகள், தொழில்நுட்பம் அல்லது ஏனைய பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.
   - **180 மில்லியன்** ரூபாவில், மனுதாரரின் மாதாந்த நிதித் தேவையை அடைவதற்காக, பெற்றுக்கொள்ள முடியுமான அல்லது கையிருப்பில் இருக்கின்ற அசையும் சொத்துக்கள், கடன் வழிமுறைகள் அல்லது ஏனைய நிதி மூலங்களை, மனுதாரர் நிரூபிக்க வேண்டும்.

4. ஆர்வமுள்ள மனுதாரர் பின்வரும் முகவரியில் மேலதிக விபரங்களைப் பெறலாம்:
   உதவி பொது முகாமையாளர் (கேள்விமனு மற்றும் ஒப்பந்தங்கள்),
   தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை,
   காலி வீதி, இரத்மலானை.

   தொலைபேசியூடாக: 0094 11-2635885 அல்லது 0094 11-2638999 விரிவு. 1750 அல்லது தொலைநகல் இல: 0094 11-2635885

   மின்னஞ்சல்: agmtenders@waterboard.lk

   இதே அலுவலகத்தில், மனு ஆவணங்களை கட்டணமின்றிப் பரிசீலிக்கலாம்.

5. கேள்விமனுக்கு முந்திய கூட்டமொன்று, தொழில்வழங்குநரால், 09/03/2017 ஆம் திகதி, முற்பகல் 10 மணிக்கு, தெலவல தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை பயிற்சி நிலையத்தில் நடாத்தப்படும். இதனைத் தொடர்ந்து, கட்டடங்கள் அமைக்கப்படும் இடம் தரிசிக்கப்படும்.

6. ஆர்வமுள்ள மனுதாரர், ஆங்கில மொழியிலான முழுமையான கேள்விமனு ஆவணங்களைப் பெற, வியாபார இலச்சினை பொறித்த கடிதத் தாளில், பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தை, பொது ஒப்பந்த பதிவாளரிடம் 1987 இன் 03 ஆம் இலக்க சட்டத்தின்படி பதிவுசெய்யப்பட்ட மனுதாரரின் பதிவுடன், இரத்மலானையிலுள்ள தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையில், 15/02/2017 முதல் 03/04/2017 வரை முற்பகல் 09 மணி முதல் பிற்பகல் 03 மணி ஒப்படைப்பதன் மூலம், சாதாரண வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். மீளச் செலுத்தப்படாத 25,000 ரூபாவை மற்றும் வற் தொகையை காசாகவோ அல்லது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு வங்கி வரைவாகவோ வழங்குவதன் மூலம் மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட கேள்விமனுக்கள், கேள்விமனு ஆவணத்தில் (தகவல் படிவம்) குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விமனு பாதுகாப்புத் தொகையுடன், பின்வரும் முகவரிக்கு 04/04/2017 ஆம் திகதி, முற்பகல் 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் வழங்கப்பட வேண்டும். மனுதாரர் தெரிவு செய்து அனுப்பும் பிரதிநிதிகளுக்கு முன்னால், அதே இடத்தில், அதே தினம் **முற்பகல் 10 மணிக்கு** கேள்விமனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வரை, நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் பணிப்பாளரிடம் (பெறுகை) விலை குறிக்கப்பட்ட மனுக்கள் திறக்கப்படாமல், பாதுகாப்பில் வைக்கப்படும்.

   பணிப்பாளர் (பெறுகை)
   நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
   "லக்திய மெதுர,
   இலக்கம்: 35,
   சுனில் மாவத்தை,
   பெலவத்த,
   பத்தரமுல்ல,
   இலங்கை.

8. கேள்விமனுக்களை தயாரித்தல், கேள்விமனுக்கு முந்திய கூட்டத்திற்கு சமூகமளித்தல், கேள்விமனுக்களை ஒப்படைத்தலுடன் தொடர்புபட்ட எந்தவொரு செலவினங்களுக்கும், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை பொறுப்பேற்காது.

**தலைவர்,**
**அமைச்சரவை நியமித்துள்ள நிலையான பெறுகை குழு**
**நகர திட்டமிடல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு**




‘‘எனது தகப்பனார் பற்றியும் அவர் இலங்கையில் எவ்வாறு வாழ்ந்தார் என்பது பற்றியும் அவரது ஆற்றல், ஆளுமைகள் பற்றியும் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பகிரங்கப்படுத்தியமைக்கும் நவமணி நாளேட்டுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன்'' இவ்வாறு தமிழ்நாடு கீழைக்கரையிலிருந்து இங்கு வருகை தந்திருக்கும் பன்னூலாசிரியர் எம்.கே.ஈ. மௌலானாவின் புத்திரர் பிரபல வர்த்தகர் நிஜாமுத்தீன் ஹாஜி கூறினார்.

மறிச்சுக்கட்டி-முள்ளிக்குளத்தில் நீண்ட காலம் வசித்து வந்த கீழைக்கரையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் - பன்னூலாசிரியர் எம்.கே.ஈ. மௌலானாவைப் பற்றி, - முள்ளிக்குளத்தில் வர்த்தக நடவடிக்கையின் பொருட்டு வாழ்ந்து வந்த, தமிழ் நாடு கீழைக்கரையைச் சேர்ந்த எம்.கே.ஈ. மௌலானாவைப் பற்றியும் ஒரு பந்தியில் பதியப்பட்டிருந்தது.

## வில்பத்து டைரி தொடர்பாக....

### பன்னூலாசிரியர் எம்.கே.ஈ. மௌலானாவின் புத்திரர் இலங்கை வருகை



அதனை வாசித்த மௌலானாவின் புத்திரர், மேலும் பல தகவல்களைத் திரட்டிக் கொள்ளும் பொருட்டு தனது சகபாடியுடன் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

உடனடியாகக் கலைவாதி கலீலைச் சந்தித்து கலந்துரையாடினார். இவர்களை, முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் ஆகியோருக்குக் கலைவாதி கலீல் அறிமுகம் செய்து வைத்தார்.

மறிச்சுக்கட்டிப் பிரதேசத்திற்குச் சென்று தனது தந்தை வசித்து வந்த இடத்தைப் பார்வையிடுவதுடன் அவர் தொடர்பான மேலும் பல தகவல்கள் திரட்டும் பொருட்டு முள்ளிக்குளத்துக்கு நிஜாம் ஹாஜியும் றிபாய் ஹாஜியும் சென்றுள்ளனர்.

நவமணி நாளேட்டில் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலைவாதி கலீல், எழுதி வந்த '**என் வில்பத்து டைரி**' கட்டுரைத் தொடர் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே மௌலானாவின் புத்திரர் நிஜாம் ஹாஜி மேற்படி கருத்தை முன்வைத்தார். அவருடன் மற்றொரு பிரபல வர்த்தகரான அஹமது றிபாய் ஹாஜியாரும் வருகை தந்திருந்தார்.

வில்பத்து விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டு உண்மைத்தகவல்களை உள்ளடக்கி தக்க சன்றாதாரங்களுடன் எழுதப்பட்ட இக்கட்டுரை தொடர் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்டுரைத் தொடரில், ஓரிடத்தில் 1960 களில் வில்பத்து - மறிச்சுக்கட்டிப் பிரதேச

எம்.கே.ஈ. மௌலானாவின் பெயரின் முன்னாலிருக்கும் எம்.கே. என்ற எழுத்து முள்ளிக்குளத்தைக் குறிப்பதாகும். மௌலானா, இலங்கையில் 'முள்ளிக்குளம் மௌலானா' என்றே அழைக்கப்பட்டார். 'பசுங்கதிர்' என்ற சஞ்சிகையை நடாத்தி வந்த இவர், சேது முதல் சிந்து வரை, தாமரப் பட்டினம் இரு வர்த்தகர்களின் கதை 'பல்கீஸ்ராணி' பற்றிய ஆய்வு நூல் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

★★★



## வாழ்க்கை வாழ்வதற்கா...?

வாழ்க்கை வாழ்வதற்கே... என்று
வாழத் துணிந்தேன்!
வண்ணத்துப் பூச்சியின்
வர்ணச் சிறகடிப்பாய் - இனித்தது!
இதுதான் வாழ்க்கை - என
இறுமாந்திருந்தேன்!

நான்; என் கனவுகள்,
நான்; என் கவிதைகள்,
நான்; என் சிந்தனைகள்,
நான்; என் நிகழ்வுகள்,
என்னுடன் என் நண்பர்கள்,
எம்முடன் எம் உறவுகள்,
எங்களுக்குள் உரிமைகள்;

நான்
நிலவாய், நிலமாய்,
வானமாய்,
வண்ணப் பூஞ்சோலையாய்,
நீருற்றாய்,
நெகிழ்ச்சி மிகு
பூங்காற்றாய்,
பாடும் பறவையாய், ஓடும் நதியாய்,
தவழும் அலையாய்,
புலரும் பொழுதாய்,
சூரியனும் நானாய்
சந்திரனும் நானாய்
அண்டமும் நானாய்
அகிலமும் நானாய்
அண்ட சராசரமுமே நானாய்...
மகிழ்ச்சியாய், பிரகாசமாய், பிரவாகமாய்
பூரித்துப் போகின்றேன். கண்ணில் ஈரம்...
அத்தனையும் கனவு
அழுக்கு உலகு அழுது விட்டேன்!

**- பாதிமா நஸ்வா ஷாமில், எலுவிலை**

## ஆய்வாளர்களின் கவனத்திற்கு...!

புனைகதை, கவிதைகள் பற்றி ஆய்வு செய்கிற ஆய்வாளர்கள், கட்டாயமாகப் படித்துப் பார்க்க வேண்டிய எழுத்தாளர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றை வாரா வாரம் தந்து கொண்டிருக்கின்றேன்.

அந்த வகையில் கடந்த வாரத்தின் தொடர்ச்சியாகக் கவிஞர்கள் சிலரின் பெயரைத்தர விழைகிறேன். குறைந்தது பதினைந்து கவிதைகளாவது பிரபல பத்திரிகைகளில் எழுதியிருந்தவர்களின் பெயர் மட்டுமே இதில் உள்ளடக்கம்.

**கவிஞர் அப்துல் காதர் லெப்பை**
**ஏ. எம். எம். அலி**
**நஜ்முல் ஹுசைன்**
**நூருல் ஐன் நஜ்முல் ஹுசைன்**
**எம்.எச்.எம். ஷம்ஸ்**
**திக்வெல்லை கமால்**
**திக்வெல்லை சப்வான்**
**காத்தான்குடி பௌஸ்**
**மேமன்கவி**
**ஏ.எல்.எம். சத்தார்(அல் - அஸ்லம்)**
**அஸாத் எம். ஹனீபா**
**பண்ணாமத்துக் கவிராயர்**
**ஈழத்து நூன் எம்.ஏ.எம். நிலாம்**
**யாழ். அஸீம்**
**மாத்தளைக் கமால்**
**பொத்துவில் அஸ்மின்**
**கிண்ணியா அமீர் அலி**
**அன்பு ஜவஹர்ஷா**
**மஹ்ரூப் கரீம்**
**பாணந்துறை நிஸ்வான்**
**ஏறாவூர் அனலக்தர்**
**மூதூர் முகைதீன்**
**இளநெஞ்சன் முர்ஷிதீன்**
**இப்னு அசூமத்**
**சோலைக் கிளி அதீத்**
**பாலமுனை பாறூக்**
**அன்புடீன்**
**கலைமேகம்**
**எஸ்.ஏ. கரீம்(கொழும்பு)**
**மன்னார் உமர்(அபூபக்கர்)**
**வெலிப்பன்னை அத்தாஸ்**

(இன்னும் வரும்)



## இனவாத ஊடகங்கள்

தோரணங்களுக்காக
காரணங்களைத் தேடும்
தோகை இழந்த மயில்கள்
மரத்துப் போன மனிதத்தின்
மக்கிய எச்சங்கள்

காட்டிக் கொடுக்கும் கயமை
கூட்டிக் கொடுப்பதில் குதூகலம்
ஊட்டி விடும் பாசாங்கு

ஊடக விபச்சாரம்
சீழ்வடியும் ரணங்களை
சீராட்டும் வெறித்தனம்!
பசுத்தோல் போர்த்திய
பயங்கர உண்ணிகள்!

ஊதிப் பெருப்பிக்கவும்
உசுப்பேத்தி விடவும்
போட்டி போட்டுக் கொண்டு
பொங்கியெழும் பகடைகள்

நரித்தனமாய் நஞ்சை விதைக்கும்
நெறிகெட்ட ஊடகங்களை விட
தரித்திரத்திற்கு தசை விற்கும்
தரங்கெட்ட தாசிகள் மேல்

தண்டவாளங்களை விட்டு விட்டு
வண்டவாளங்களில் பயணிக்கும்
ஊரை இரண்டாக்கும்
ஊடக வியாபாரிகள்

கொள்ளிக்கட்டைகளால் முதுகு சொறியும்
கோடாரிக் கம்புகளாய்
தேசம் பற்றியெரியும் ஒருநாள்
தேசமே பற்றியெரியும்!

அரிப்பை மூலதனமாக்கும்
இனவாத ஊடகங்கள்
எரிச்சலாய் உணர்ச்சியைத் தாலாட்டி
சொறிச்சலில் சுகங்காணும் சீக்காளிகள்!

**கம்மல்துறை இக்பால்**

# அநாதைப்பிள்ளைகள் சமூகத்தின் ஓர் அங்கம்

## அபூபக்கர் சித்திக் தெரிவிப்பு







(குருநாகல் இக்பால் அலி)

இலங்கையில் எமது சமுதாயத்தில் தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளின் எதிர்காலம் மிகவும் கவலை தரும் விடயமாகவே உள்ளனர். அவர்களுடைய வரலாறு மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. இந்த நிலை மாற வேண்டும். அநாதைப் பிள்ளைகளாக இருந்தாலும் கூட அவர்கள் எமது சமுதாயத்தில் ஓர் அங்கம். அவர்களையும் நாம் கை தூக்கி விட வேண்டும். கல்வி ரீதியாக சிறந்த நற்பிரஜையாக உருவாக்கி அவர்களை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொதுத் தலைவர் அஷ்ஷெய்க் என். பீ. எம். அபூபக்கர் சித்தீக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி நாவலடி ஹிஜ்ரா நகர் தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா மர்கஸ் அந்நூர் கல்விக் கூடத்தின் கிளையினால் ஏற்பாடு செய்த க. பொ. த. உயர் தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மர்கஸ் அந்நூர் கேட்போர் கூடத்தில் அதிபர் அஷ்ஷெய்க் ஏ. ஹபீப் தலைமையில் இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், நல்ல நோக்கத்தில் நாங்கள் அநாதைக் கல்விக் கூடங்களை ஆரம்பித்தோம். அதன் நோக்கத்தை ஓட்டமாவடி மர்கஸ் அந்நூரில் பயிலும் மாணவர்கள் திறன்பட நிறைவு செய்துள்ளார் என்பதை பார்க்கின்ற போது மனதிற்கு சந்தோசமாக இருக்கின்றது மனிதனை மனிதனாக வாழவைப்பதற்கும் மனிதன் இவ்வுலகில் உயரிய அந்தஸ்துடன் வாழ்வதற்கும் கல்வி அவசியமாகும். கல்வி இல்லையேல் மனிதனுக்கு உயர்வு கிடையாது. கல்வி இல்லையேல் மனிதன் மனிதனாக வாழ முடியாது. இதனால்தான் கல்விக்கு இஸ்லாம் மிக முக்கியமான உயர்ந்த அந்தஸ்தைக் கொடுத்திருப்பதை குர்ஆனிலும் சுன்னாவிலும் நாம் பார்க்கின்றோம்.

எமது மார்க்கக் கல்வியை முழுமையாகக் கற்பதன் மூலமாகத் தான் எமது இறைவனைப் பற்றியும் எமது முஹம்மது (ஸல்) அவர்கள் பற்றியும் நாம் ஏற்றுக் கொண்டுள்ள புனித மார்க்கத்தை பற்றியும் முழுமையாக அறிந்து கொள்ளமுடியும். மண்ணறையில் இருக்கக் கூடிய மனிதனிடம் கேட்கக் கூடிய கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியும். எனவே எமது மார்க்கக் கல்வி ஒவ்வொரு மனிதனையும் வாழ்க்கையில் உயர்ந்த இடத்திற்குக் கொண்டு செல்லக் கூடியவை. உயர்ந்த அஸ்துடன் வாழ வைக்கக் கூடிய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். பணம், சொத்து சுகங்கள் உள்ளவர்களை விட கல்விமான்களுக்குத்தான் உலகில் முதலிடம் இருக்கிறது.

மார்க்கக் கல்வியைக் கற்றால்தான் இவ்வுலகிலும் மறுமையிலும் சிறப்பை அடையலாம் என்ற உறுதியான நம்பிக்கை எம்முடைய ஒவ்வொரு உள்ளத்திலும் ஆழமாக இருத்தல் வேண்டும் என மேலும் கூறினார்.

இந்நிகழ்வில் உண்மை உதயம் சஞ்சிகை ஆசிரியர் எஸ். ஏச். எம். இஸ்மாயீல், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். எல். ஏ. ஜுனைத், வாழைச்சேனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். ஏ. றியாஸ், சட்டத்தரணி எம். ஏ. றாசிக், கலாசார உத்தியோகஸ்தர் அஷ்ஷெய்க பீர்முஹம்மது. அஷ்ஷெய்க் எம். பி. எம் இஸ்மாயீல் மதனி அஷ்ஷெய்க் வி. டி. எம். முஸ்தபா, ஓட்டமாவடி அரபாத் உள்ளிட்ட பல வர்த்தப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# மட்டு.வின் பல்வேறு பகுதிகளில் குப்பைகளை தரம்பிரிக்கும் பணிகள்

(அட்டாளைச்சேனை பைஷல் இஸ்மாயில்)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத்திற்குற்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி ஆரையம்பதி மட்டக்களப்பு ஏறாவூர் மற்றும் செங்கலடி போன்ற பிரதேச மற்றும் நகர சபைப்பிரிவுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து அவற்றினை கொடுவாமடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு அனுப்பும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 5 பிரதேச சபை மற்றும் நகர சபை பிரிவுகளில் குப்பைகளைத் தரம் பிரிக்கும் நடவடிக்கை மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.சித்திரவேல் தலைமையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட்டினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உக்கும் குப்பை, உக்காத குப்பைகள், மீள் சுழற்சிக்கான குப்பை மற்றும் பசளைக் குப்பை என நான்கு வகையாக குப்பைகள் தரம் பிரித்து, அவற்றை மட்டக்களப்பு - செங்கலடி கொடுவாமடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குப்பைகளைத் தரம்பிரிக்கும் ஆரம்ப வைபவத்தில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான இரா.துரைரட்ணம், ஞா.கிருஸ்ணப்பிள்ளை, கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் எம். அஸீஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# மாகாண மட்டத்திலான தமிழ் தினப்போட்டி திகதிகள்

(கந்தளாய் எப்.முபாறக்)

2017 ஆம் ஆண்டின் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழி தினப் போட்டிகளுக்கான திகதிகளை கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இதன்படி பாடசாலை மட்டத்தில் அனைத்து போட்டிகளும் இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னரும் வலயமட்டத்தின் அனைத்துப் போட்டிகளும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னரும் நடைபெற வேண்டும். இதேவேளை மாவட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகள் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும். கடந்த வருடம் போல் மாவட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டிகளை மாகாணக் கல்வித் திணைக்களம் நடாத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட மட்ட அனைத்துப் போட்டிகளும் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன் நடாத்தப்படுவதோடு, மாகாண நிலை எழுத்தாக்கப் போட்டிகள் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும்.

எழுத்தாக்கம் தவிர்ந்த ஏனைய மாகாண நிலை போட்டிகள் மே 20, 21 ஆம் திகதிகளில் நடைபெறும். மே மாதம் 20 ஆம் திகதி போட்டி இலக்கம் 15 வாசிப்பு தொடக்கம் போட்டி இலக்கம் 28 இசை வரையான 14 போட்டிகள் நடைபெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மே மாதம் 21 ஆம் திகதி போட்டி இலக்கம் 29 இசை தனி தொடக்கம் போட்டி இலக்கம் 46 முஸ்லிம் நிகழ்ச்சி வரையான 18 நிகழ்ச்சிகள் நடைபெறும் இதற்கான இடங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இந்த சுற்றறிக்கைக்கு ஏற்ப கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலை அதிபர்களும் செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



# இமாம் நூர்ஸியும் ரிஸாலா ஏ நூரும்



தொடர் - 4

## நவீன துருக்கி

### மதச்சார்பின்மையிலிருந்து இஸ்லாமியவாதத்தை நோக்கி

**அஷ்கர் தஸ்லீம்**

இமாம் பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி அவர்கள், தம் வாழ்வின் புதிய அத்தியாயத்தை (புதிய ஸஈத்) அரசியலை விட்டும் ஒதுங்கியவராகவே அமைத்துக் கொண்டார். 'வான்' என்ற பிரதேசத்தில் வாழ்ந்து வந்த இமாமவர்கள், தன்னைச் சூழ இளைஞர்களை அழைத்து அல்குர்ஆனின் சிந்தனைகளைப் போதித்து வந்தார்.

1926 - 1950 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில், 130 க்கும் மேற்பட்ட ரஸாஇல்களை துருக்கி மொழியில் அவர் எழுதினார். இவை ஆன்மீகம், பகுத்தறிவு சார் விடயங்களை ஆராய்ந்தன. இந்த விளக்கவுரைகள் அனைத்தும் அல்குர்ஆனின் மையக்கருத்துக்களையும் அதன் விளக்கங்களையும் மையப்படுத்தியே அமைந்திருந்தன. இமாமவர்கள் ஓர் அல்குர்ஆன் வசனத்துக்கான தப்ஸீரை இரு வகையில் விளக்குவார். முதலாவதாக, குறித்த அல்குர்ஆன் வசனத்தின் வெளிப்படையான கருத்தை விளக்குவார். இரண்டாவதாக, அந்த அல்குர்ஆன் வசனத்தின் பின்னணியில் நின்று ஈமானின் அத்தாட்சிகளையும் அதிலுள்ள பிரபஞ்ச இரகசியங்கள், தற்காலத்துடன் அது எவ்வாறு தொடர்புபடுகின்றது, அதன் நாகரிகப் பங்கு என்ன என்பன பற்றியும் விளக்குவார். இவ்வாறு இமாமவர்கள் எழுதிய அல்குர்ஆனுக்கான விளக்கவுரைகள்தான் ரிஸாலா ஏ நூர் என வழங்கப்படுகின்றது.

இந்தக் காலப் பகுதியில் முஸ்தபா கமால் அரபு லிபியில் துருக்கிய மொழி எழுதப்படுவதை தடை செய்திருந்தார். இதனை எதிர்ப்பதற்காக இமாம் பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸியின் மாணவர்கள் ரிஸாலா ஏ நூரின் பிரதிகளை அரபு லிபியிலேயே எழுதினார்கள். இவ்வாறு எழுதப்படும் விளக்கவுரைகள் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. பின்னர், அவற்றைப் பெற்றுக் கொள்வோரும் இன்னும் பல பிரதிகளை தம் கைகளாலேயே எழுதி விநியோகித்தனர்.

சுமார் 20 வருடங்களாக ரிஸாலா ஏ நூர் பிரதிகள் கைகளாலேயே எழுதப்பட்டன. இளைஞர்களும் யுவதிகளும் இந்தப் பணியில் மிகுந்த உற்சாகத்தோடு ஈடுபட்டு வந்தனர். துருக்கியர்கள் இரவு நேரங்களில் விழித்திருந்து ரிஸாலா ஏ நூர் பிரதிககளை தமது கைகளா லேயே எழுதி வந்தனர். இதனை அவதானித்த மதச்சார்பற்ற அரசாங்கம் அவர்களை கைது செய்து வந்தது. இமாமவர்களின் ரிஸாலா ஏ நூர் துருக்கியின் நாலாபுறங்களிலும் பரவி மக்கள் மத்தியில் இடம் பிடிக்கலானது. இதனை அவதானித்த மதச்சார்பற்ற அரசாங்கம், இமாமவர்களை

(09 ஆம் பக்கம் பார்க்க)


நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

National Water Supply & Drinage Board

### விலைமனு அறிவித்தல்

பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வழங்கல்கள் / வேலைகளுக்காக தகைமை மற்றும் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தவிசாளர் இத்தால் அழைக்கின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படும் கேள்விப் பிணைமுறி | தகைமை தேவைப்பாடுகள் | மதிப்பீட்டு செலவு(ரூபா) வெட் வரி நீங்கலாக | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | |
| இரத்தினபுரி பொது வைத்தியசாலை நீர் சுத்திகரிப்பு நிலையத்தை பெரிதாக்குதல்<br>**ஒப்பந்த இல: RSC/P&D/CIVIL/RECH/RAT/HOSPITAL/2016/31** | 8,000/- + பெ.சே. வரி | ரூபா. 200,000/- | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 16.75 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை தொ.பேசி/ தொ.நகல்: 0112635885 | 17/03/2017 10.00 மணி |
| ஓயாமடு நீர் வழங்கல் திட்டத்தில் ஓயாமடு நீட்டிப்பு எஞ்சியுள்ள வேலைக்கு uPVC/DI குழாய்கள், பொருத்திகள், உபகரணங்கள் மற்றும் வால்வுகளை பதித்தல்<br>**ஒப்பந்த இல: CKD/NC/DGM/OMD/2017/008** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 20,000/- | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் C7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 1.83 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமத்தி) கொடகே மாவத்தை, அநுராதபுரம் தொ.பேசி: 0252235993, தொ.நகல்: 0252225609 | 01/03/2017 14.00 மணி |
| 20 கனமீற்றர் கொள்ளவுடைய பெர்ரோ சீமெந்து மட்டத்தொட்டி தாங்கி, குழு அறை, ஸ்டான்ட் போஸ்ட் ஆகியவற்றை நிர்மாணித்தல் மற்றும் பம்பி, தேவைப்படும் குழாய் வேலைகள்<br>**ஒப்பந்த இல: RSC/N/DGM/RWS/CIVIL WORKS/NANATTAN/2016/64** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 45,000/- | கட்டிட நிர்மாணத்துறை/ நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் C8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 4.5 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடக்கு) தே.நீ.வ.வ.ச., யாழ்ப்பாண வீதி, வவுனியா தொ.பேசி: 0242225719, தொ.நகல்: 0242225088 | 01/03/2017 14.00 மணி |
| ஹபுத்தளை நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உலர் படுக்கை சேறுகளை அகற்றுதல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/C/HAPUGALA/SLU.DRY.BEDS/O&M/2016-195R** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 27,000/- | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் C9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 1.8 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு) 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரண, மாத்தறை தொ.பேசி: 0412229792, தொ.நகல்: 0412224769 | 01/03/2017 14.00 மணி |
| ஹம்பாந்தோட்டை பிராந்திய முகாமையாளர் அலுவலகத்தை புனரமைத்தல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/C/RENO./RM OFFICE/HAMBANTOTA/RH/2016-157R** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 22,500/- | கட்டிட நிர்மாணத்துறை/ நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு துறையில் C9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA நிறுவனத்தில் பதிவு | 1.47 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு) 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரண, மாத்தறை தொ.பேசி: 0412229792, தொ.நகல்: 0412224769 | 01/03/2017 14.00 மணி |
| **இயந்திரம் மற்றும் மின்னியல் கேள்விகள்** | | | | | | |
| கவுல்ஹேன பூஸ்டர் பம்பி இல்லத்தில் அணில் கூண்டு தூண்டல் வகை மோட்டார் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, நிறுவுதல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/S/INDUCTION MOTOR/KOWLHENA/ENERGY SAVING/2016-86R** | 2,000/- + பெ.சே. வரி | Rs. 13,500/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு) 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரண, மாத்தறை தொ.பேசி: 0412229792, தொ.நகல்: 0412224769 | 01/03/2017 14.00 மணி |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | |
| 3,000 தொன் அலுமினியம் சல்பேற்றை வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: SUP&MM/CHEM/ALS/2016/03** | 15,000/- + பெ.சே. வரி | ரூபா. 1,170,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற உள்ளூர் முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 1987இன் 3ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பதிவுச்சான்றிதழ் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை தொ.பேசி/ தொ.நகல்: 0112635885 | 15/03/2017 10.00 மணி |
| கொன்டுவட்டுவான் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ECTAD திட்டத்துக்கு Dispersion Inlet Modulating Valve Assembly மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: RSC(E)/AGM (ES)/DIMVA/O&M/ECTAD-KTP/2016/42R** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 17,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | உதவி பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், தே.நீ.வ.வ.ச., சிறி தர்மரத்ன மாவத்தை, அம்பாறை தொ.பேசி: 0632223926, தொ.நகல்: 0632224975 | 09/03/2017 10.00 மணி |
| தென் பிராந்தியத்துக்கு 1000 லீற்றர், 2000 லீற்றர், 5000 லீற்றர் கொள்ளவுடைய பொலித்தீலேன் நீர்த்தாங்கிகளை வழங்கி, விநியோகித்தல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/P&C/PEWATERTANKS/DROUGHTRELIEF/2017-64R** | 4,000/- + பெ.சே. வரி | ரூபா. 62,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு) 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரண, மாத்தறை தொ.பேசி: 0412229792, தொ.நகல்: 0412224769 | 01/03/2017 14.00 மணி |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்தல்** | | | | | | |
| 08.02.2017 திகதிய விளம்பரத்தின்படி, கேகாலை பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்துக்கு வான் ஒன்றை வாடகைக்கமர்த்தல். **ஒப்பந்த இல: RSC(SAB)/AGM(KEG)/O&M/KEGALLE/SER/2016/125** - இந்தக் **கேள்விக்கான ஆவணங்கள் விநியோகிக்கப்படும் இடம்** முகாமையாளர் (இயந்திரம் மற்றும் மின்னியல்), தே.நீ.வ.வ.ச., இல: 114, குமாரதுங்க முனிதாச மாவத்தை, கேகாலை. தொலைபேசி: 0352231807, தொலைநகல்: 0352231823 என மாற்றப்பட்டுள்ளது என்பதை கவனத்திற்கொள்ளவும். | | | | | | |
| பியகம கழிவுநீர் திட்ட அலுவலகத்துக்கு Crew Cab ஒன்றை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: AGM(GCS)/CREW CAB HIRE/BIYAGAMA/2017/02** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 20,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தே.நீ.வ.வ.ச., காலி வீதி, இரத்மலானை தொ.பேசி/ தொ.நகல்: 0112635885 | 06/03/2017 10.00 மணி |
| ஹரிஸ்சந்திர மாவத்தை, அனுராதபுரம் CKDu அலுவலகத்துக்கு Crew Cab ஒன்றை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: CKD/NC/DGM/HV-CREW CAB/2017/001 R** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 23,500/- | போக்குவரத்து சேவை வழங்குனர்/ வாகன உரிமையாளர் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமத்தி) கொடகே மாவத்தை, அநுராதபுரம் தொ.பேசி: 0252235993, தொ.நகல்: 0252225609 | 01/03/2017 14.00 மணி |
| ஹரிஸ்சந்திர மாவத்தை, அனுராதபுரம் CKDu அலுவலகத்துக்கு Double Cab ஒன்றை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: CKD/NC/DGM/HV/DOUBLE CAB/2016/469 R** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 23,500/- | போக்குவரத்து சேவை வழங்குனர்/ வாகன உரிமையாளர் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமத்தி) கொடகே மாவத்தை, அநுராதபுரம் தொ.பேசி: 0252235993, தொ.நகல்: 0252225609 | 01/03/2017 14.00 மணி |
| அனுராதபுரம் நிலத்தடி நீர் அலுவலகத்துக்கு 2 Crew Cab வாகனங்களை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: GW (DR)/NC/DGM/HV-CREW CAB/2017/020** | 2,000/- + பெ.சே. வரி | ரூபா. 25,560/- | போக்குவரத்து சேவை வழங்குனர்/ வாகன உரிமையாளர் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (வடமத்தி) கொடகே மாவத்தை, அநுராதபுரம் தொ.பேசி: 0252235993, தொ.நகல்: 0252225609 | 01/03/2017 14.00 மணி |
| தெற்கு பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்தின் வர்த்தக பிரிவுக்கு வான் ஒன்றை வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: RSC(S)/COMMERCIAL/HIRING/VAN/O&M-RSC/2017-43R** | 500/- + பெ.சே. வரி | ரூபா. 5,000/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (தெற்கு) 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரண, மாத்தறை தொ.பேசி: 0412229792, தொ.நகல்: 0412224769 | 01/03/2017 14.00 மணி |
| தெஹிவளை முகாமையாளர் அலுவலகத்துக்கு 2 Crew Cab அல்லது Double Cab, தெஹிவளை அலுவலக பொறுப்பாளர் அலுவலகத்துக்கு 1 Crew Cab அல்லது Double Cab, களுத்துறை அலுவலக பொறுப்பாளர் அலுவலகத்துக்கு 1 Crew Cab அல்லது Double Cab, பயாகல அலுவலக பொறுப்பாளர் அலுவலகத்துக்கு 1 Crew Cab அல்லது Double Cab வாடகைக்கமர்த்தல்<br>**ஒப்பந்த இல: W-S/P&C/H(01)/ DGM/O&M/2017/05R-01** | 2,000/- + பெ.சே. வரி | வாகனம் ஒன்றுக்கு ரூபா.5,000/- | தொடர்புடைய வாகன உரிமையாளர்கள் | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (மேற்கு தெற்கு) தே.நீ.வ.வ.ச., இல.07, அங்குலான புகையிரத நிலைய வீதி, அங்குலானை, மொரட்டுவை தொ.பேசி: 0112224888, தொ.நகல்: 0112637945 | 02/03/2017 10.00 மணி |

தகுதித்தன்மைக்கான சான்றுகளுடன் வியாபாரக் கடிதத் தலைப்பில் ஆவணங்களுக்கான வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும். மற்றும் **இறுதித் திகதிக்கு** முன்னைய நாள் வரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்கும் இடையில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடங்களில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

கேள்விகள் மூடப்பட்டவுடனேயே சமுகமளித்திருக்கும் கேள்விதாரர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். **தாமதமாக விலைமனு சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.**

**தவிசாளர்,**

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்**

# நல்லாட்சி மீதான நம்பிக்கை படிப்படியாக குறைகிறது

## பந்துல குணவர்தன



(அ.அருண் பிரசாந்த்)

நல்லாட்சி மீதான மக்களின் நம்பிக்கை தற்போது படிப்படியாக குறைவடைந்து வருகின்றது என ஒருங்கிணைந்த எதிரணி உறுப்பினரான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பொரளையில் அமைந்துள்ள ஸ்ரீவஜித சர்மா பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, இந்த நல்லாட்சி அரசு ஆட்சி பீடமேறி இரண்டு வயது பூர்த்தியாகியுள்ள நிலையில் நாட்டின் அனைத்து துறைகளினதும் நம்பிக்கைத்தன்மையை அரசு முற்றாக இழந்துள்ளது. 100 நாட்கள் செயற்திட்டத்தின் கீழ் ஆட்சிபீடமேறிய இடைக்கால அரசானது மத்திய வங்கியில் செய்த கொள்கையினால், இலங்கையில் செய்யப்பட்டிருந்த வெளிநாட்டு முதலீடுகள் அனைத்தும் பெறப்பட்டன.

இதனால் மட்டும் 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அத்தோடு இலங்கையின் வங்கி முறைமை மற்றும் பங்கு பரிவர்த்தனைகள் கூட பாதிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் மத்தியவங்கியிலிருந்து 5000 ரூபாய் நோட்டுகள் எடுக்கப்பட்டு அவை தேர்தலுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டதாக நிதியமைச்சர் அண்மையில் தெரிவித்திருந்தார். அவ்வாறான பொய்யொன்றினை கூறி இலங்கையின் நாணயத்தின் மிதான நம்பிக்கையையும் அமைச்சர் பாதிப்புக்குள்ளாக்கினார்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் இவ்வரசானது தற்போது மக்களிடத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தனது செல்வாக்கினை இழந்து வருகின்றது என்றார்.

## உயர்தர மாணவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி வகுப்புகள்

(ஐ.ஏ.ஸிறாஜ் பாலமுனை)

கல்வி அமைச்சின் திட்டத்திற்கமைவாக பாடசாலை மாணவர்களிடையே தகவல் தொழில் நுட்ப அறிவை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் அனுசரணையில் வலயத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கமைவாக உயர்தரப் பிரிவு மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப பயிற்சி நெறியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று கல்வி வலயப்பிரிவுக்குட்பட்ட பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரியில் இடம்பற்றது.

பாடசாலை அதிபர் எஸ்.எம்.எம்.ஹனிபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை தகவல் தொழிநுட்ப பாடப்பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகர் எம்.ஐ.நசார், எஸ்.எல்.ஏ.பாஹிம், தகவல் தொழில்நுட்ப பாட விரிவுரையாளர் எம்.ஐ.சியாத், பாடசாலை பிரதி அதிபர் ஐ.எம்.பாஹிம் உட்பட ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# நிகழ்வுகள்

## விளையாட்டுப்போட்டி

(பேருவளை நிருபர் முக்தார் )

பேருவளை விஸ்டம் சர்வதேசப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் கலை,கலாசார நிகழ்வும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் விஸ்டம் சர்வதேச பாடசாலை முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம். பௌஸர் ஹுஸைன் (நளீமி) தலைமையில் நடைபெறும். சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் சேர்த்த வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜமீல்,பேருவளை ஸ்ரீ.ல.சு. கட்சிபிரதம அமைப்பாளர் எம்.எம்.எம்.அம்ஜாத் எம்.எஸ்.எம். அஸ்லம் ஹாஜியார் ஆகியோர் கௌரவஅதிதிகளாக பங்குபற்றுவர். அதிபர் அஷ்செய்க் றஸீன் அஸன் (நளீமி) தலைமையிலானஏற்பாட்டுக் குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

## கோல்டன் விழா

(பேருவளைநிருபர் முக்தார்)

பேருவளைகோல்டன் கேட் சர்வதேச பாடசாலையின் கோல்டன் தினவிழா எதிர்வரும் 19ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு சீனன் கோட்டை அல் - ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம். ஜாபிர் ஹாஜியார் மண்டபத்தில் பாடசாலை முகாமைத்துவ பணிப்பாளர் ஹஸன் பாஸி தலைமையில் நடைபெறும்.

ஊடகத்துறை,பாரளுமன்ற விவகார அமைச்சர் கயன்த கருணாதிலக்க பிரதம அதிதியாகவும் தேசிய ஊடக மத்திய நிலையத் தலைவர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் கௌரவ அதிதியாகவும் கலந்துகொள்வர். மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகர் ஜமீல்,பேருவளை ஸ்ரீ.ல.சுகட்சிபிதமர் அமைப்பாளர் எம்.எம்.எம். அம்ஜாத்,பேருவளைமுன்னாள் நகரபிதா மஸாஹிர் முஹம்மத்,பேருவளை பிரதேச சபை முன்னாள் தலைவர் ஏ.ஆர்.எம். பதியுத்தீன் ஆகியோர் விசேடஅதிதிகளாகப் பங்குபற்றுவர்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறப்புச் சித்திபெற்ற பாடசாலை மாணவன் ஒருவனுக்கு காலஞ்சென்ற இளம் சட்டத்தரனி ஆதில் பாக்கீர் மாக்காரின் ஞாபகர்த்தமாக பதக்கமும் இந்நிகழ்வில் வழங்கப்படவுள்ளது. கடந்தவருடம் நடைபெற்றகோல்டன் தினநிகழ்வில் மர்ஹூம் ஆதில் பாக்கீர் மாக்கார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆற்றிய முக்கிய உரையின் ஒளிப்பதிவு இந்நிகழ்வில் மீண்டும் திரை மூலம் காண்பிக்கப்படவுள்ளதாக பாடசாலை முகாமைத்துவப் பணிப்பாளர் ஹஸன் பாஸி கூறினார்.

## எம்.ஐ.சி.எச். மீலாத்விழா

சோனக இஸ்லாமிய கலாசார நிலையம் 64ஆவது முறையாக நடத்தும் மீலாதுன் நபி விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 18 ஆம் திகதி மலை 4 மணிக்கு சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் வெள்ளவத்தை லிலி அவனியுவிலுள்ள ஷெய்ஹா பாத்திமா கட்டடத்தில் ஏ.ஏ.எம் மர்ளின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தலைவர் ஓமர் காமில் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் ஈரான் இஸ்லாமிய குடியரசின் இலங்கைத்தூதுவர் முஹம்மத் சைரி அமிரானி கலந்து கொள்வார்.

## நிர்வாகிகள் தெரிவு

(ஜெஸ்மி எம்.மூஸா)

மருதமுனை வப்ரா முச்சக்கர வண்டிச் சாரதிகள் கைத்தொழில் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நடப்பாண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு இடப்பெற்றது.

ஜே.அஜ்மல் கான் தலைவராகவும் கே.எல்.சபீக் உப தலைவராகவும் எம்.எஸ்.எம்.றிஸ்வான் செயலாளராவும் வை.எல்.எம்.பாறுக் பொருளாளராகவும் எம்.ஐ.எம்.றாசிக்-ஐ.எல்.ஜமால்தீன்-ஜே.எம்.ஹபீழ் ஆகியோரை நிர்வாக உறுப்பினர்களாகவும் கொண்ட நிர்வாகமே நடப்பாண்டுக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## தோட்டச் செய்கைக்கு விதைகள் வழங்கல்

(குருநாகல் இக்பால் அலி)



மத்திய மாகாணத்தில் வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்டச் செய்கைக்காக விதைகள் வழங்கி வைக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எம். ரமேஸ்வரன் தெரிவித்தார்.

கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலுள்ள தெரிவு செய்யப்பட்ட விவசாய மக்களுக்கே இந்த விதைகள் விநியோகம் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்ட ஜ. உலமா இற்றைப்படுத்தலை மேற்கொள்ளத்திட்டம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்தில் இயங்கிவரும் மஸ்ஜிதுகள், அறபுக் கல்லூரிகள், மக்தபுகள் சம்பந்தமாகவும், உலமாக்களோடு தொடர்புடைய தகவல்கள், சிவில் சமூக உயர் பதவி வகிப்போர் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களையும் சேகரிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாக மாவட்ட சபைத் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.ஆதம்பாவா (மதனி) தெரிவித்தார்.

நற்பட்டிமுனை ஜும்ஆ மஸ்ஜித் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, இதற்குப் பொறுப்பாக விரிவுரையாளர்களான அஷ்ஷெய்க் எப்.எம்.ஏ. அன்ஸார் மௌலானா(நளீமி), அஷ்ஷெய்க் ஏ.எல். நாஸிர் கனி(ஹாமியா), ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்களான அஷ்ஷெய்க் யு.எம். நியாஸி (ஷர்க்கி), இஸட்.எம். நதீர்(ஷர்கி), பொருளாளர் எம்.ஐ. ஹுஸைனுதீன்(றியாழி) ஆகியோர் செயலாற்றுக் குழுவாகப் பிரேரிக்கப்பட்டனர்.

மேற்படி தகவல் திரட்டு வினாக்கொத்து வடிவத்தில் 15 அம்சங்களை உள்ளடக்கியதாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள 14 கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள் மூலம் தகவல் சேகரிக்கப்பட்டு, அவை அம்பாறை மாவட்ட இற்றைப்படுத்தப்பட்ட முஸ்லிம் நலன்களையும், கலாசார, பண்பாட்டு நிலையங்களையும் பிரதிபலிக்கும் வரலாற்று ஆவணமாக நூல் வடிவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வெளியிடப்படவிருப்பதாக பிரதம ஆசிரியர் அஷ்ஷெய்க் எப்.எம்.ஏ. அன்ஸார் மௌலானா நவமணிக்குத் தெரிவித்தார்.



வவுனியாவுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வவுனியா லங்கா சதொச நிறுவனத்திற்கும் திடீர் விஜயம் செய்திருந்தார்.வாடிக்கையாளர்களுக்கு எந்தத் தட்டுப்பாடுமின்றி அரிசியையும் மற்றும் ஏனைய பொருட்களையும் விநியோகிப்பது தொடர்பில் அங்குள்ள ஊழியர்களுக்கு அறிவுறுத்தினார். அரசாங்கம் அரிசிக்கு நிர்ணயித்த விலையை விட அதிகமாக விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (படங்கள்- எம்.என்.எம்.பர்விஸ்)

# சமூகத்தில் சுயமரியாதையுடன் வாழ பல்வேறு திட்டங்களை முன்னெடுப்போம்

## அமைச்சர் மனோ கணேசன்



(ஹட்டன் க.கிஷாந்தன்)

எமது சமூகம் சுய மரியாதையுடன் இந்நாட்டில் வாழ வேண்டும் என்பதற்காக தமிழ் முற்போக்கு கூட்டணி பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும். கடந்த காலங்களில் உள்ள தலைவர்களை போல நாங்கள் தேங்காய் துருவ போகவில்லை. மக்களுக்காக பணிகளை முன்னெடுக்கவே பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவைக்கு சென்றோம் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் மலையக மக்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள 4000 தனி வீடமைப்பு வேலைத்திட்டத்திற்கமைய நேற்று முன்தினம் நுவரெலியா மாவட்டத்தில் பொகவந்தலாவ பொகவனா தோட்டத்தில் அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்திடம் தமிழ் முற்போக்கு கூட்டணி பங்காளிக் கட்சியாகவே செயல்பட்டு வருகின்றது. இந்த நாட்டில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் எமது மலையக மக்களின் பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து உதவிகளை செய்து வருகின்றனர். அந்தவகையில் இந்திய அரசாங்கம் எமது தமிழ் முற்போக்கு கூட்டணியின் கோரிக்கையை ஏற்று எமது மக்களின் அபிவிருத்திக்காகவும் நல்ல வாழ்க்கைக்காகவும் பல்வேறு உதவிகளை செய்து வருகின்றனர்.

மலையகத்தில் நவீனமான நாகரீகமான வாழ்க்கையை வாழ வைக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயற்பாடு மூலம் 50,000 வீடுகள் கட்டியே தீருவோம். இதன் ஊடாக அனைத்து மலையக மக்களையும் சுய கௌரவமான வாழ்க்கையை வாழ வைப்போம்.கடந்த காலங்களில் பாராளுமன்றம் சென்றவர்கள் மலையக மக்களின் உரிமைக்காக குரல் எழுப்புவது குறைவாகவே இருந்தது. இன்று ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் முற்போக்கு கூட்டணி மலையக மக்களுடைய உரிமைக்காக குரல் எழுப்பி வருகின்றது. கல்வி வளர்ச்சி எமது சமூகத்தின் சுயமான கௌரவமான வாழ்க்கையை உருவாக்கும் அதற்காக எமது அமைச்சர் இன்று பல்வேறு மட்டத்தில் குரல் எழுப்பி வருகின்றார்.

தொழில் வாய்ப்பு ஏனைய சேவைகள் தொடர்பில் அனைத்தும் நிறைவேற்றம் அடைந்து வருகின்றது. தமிழ் முற்போக்கு கூட்டணி இந்த அரசாங்கத்தில் பங்காளி கட்சியாக செயற்படுகின்றது. ஆகையால் அனைத்து தேவைகளும் மக்களுக்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றார்.

# மாகாண சபை உறுப்பினர் அன்வர் கியூபா நாட்டு தூதுவருடன் சந்திப்பு



(அப்துல்சலாம் யாசீம்)

கியூபா நாட்டின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் ஜூஆனா எலேனா மற்றும் உயரிஸ்தானிகர் அலுவலகத்தின் ஆலோசகர் ராவுல் கேரி ஜாரியோ ஆகியோரை கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் குழு தலைவருமான ஆர்.எம். அன்வர் நேற்றுமுன்தினம் அவரது கொழும்பு உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தார்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி விசேடமாக திருகோணலை மாவட்ட அபிவிருத்தி வேலையற்றோர்,யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த நிலையில் மீள்குடியேறமுடியாத நிலைமை,வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்றவர்களுக்கான வாழ்வாதார வசதிகள்,மீனவர்கள் மற்றும் விவசாயத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் குறித்தும் ஆர்.எம்.அன்வர் வலியுறுத்தினார்.

மேலும் அது விடயமாக எழுத்து மூலமான ஆவணம் ஒன்றை சமர்பித்ததுடன் மாகாண சபை உறுப்பினரின் அழைப்பை ஏற்று கிழக்கு மாகாணத்திற்கு வருகை தருவதாகவும் உயரிஸ்தானிகர் அதன் போது உறுதியளித்தார்.

# மனித நேயத்திற்கான பாத யாத்திரை

(மினுவாங்கொடை நிருபர்)

சிறிய இதயத்துக்கு சுகம் தாருங்கள் என்ற மனித நேயத்துக்கான பாத யாத்திரை , இலங்கை சிறுவர் நோய் நிபுணர்களின் நிறுவனத்தால், கொழும்பில் நேற்று நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை 8 மணி முதல் - மாலை 5 மணி வரை, கொழும்பு - கோட்டை, புறக்கோட்டை, மருதானை, பொரளை, கொம்பனி வீதி, லேக் ஹவுஸ் சுற்று வட்டம், விகார மகாதேவி பூங்கா உள்ளடங்கும் வகையில் இடம்பெற்ற இந்தப் பாத யாத்திரையில், சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.

'சிரச தொலைக் காட்சி நிறுவனம், பொரளை சிறுவர் வைத்தியசாலையுடன் இணைந்து, இந்தப் பாத யாத்திரையை ஏற்பாடு செய்திருந்தது. இதய நோய்களினால் ஆண்டு தோறும் மரணமாகும் குழந்தைகள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக, 200 கோடி ரூபா செலவில், முழுமையான பத்து மாடி வசதிகளைக் கொண்ட இதய அறுவைச் சிகிச்சை மற்றும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவொன்றை உருவாக்குவதற்கான நிதியைத் திரட்டுவதற்காகவே, இந்தப் பாத யாத்திரை ஒழுங்கு செய்யப்பட்டதாக, தொலைக் காட்சி நிறுவனப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். முதற் கட்டமாக, இரண்டு கோடி ரூபா நிதி சேகரிக்கப்பட்டு இதற்கு வழங்குவதென முடிவெடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். கொழும்பு - கோட்டை பிரதான ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமாகிய இந்தப் பாத யாத்திரை, பொரளை கெம்பல் மைதானத்தில் நிறைவடைந்தது.



# எல்லாம் போச்சே...

## கலைந்த கனவின் கதை

அ.அருண் பிரசாந்த்

ஆமா. நேத்து என்ன day ? காதலர்கள் ஒருகுடைக்குள் ஒரே நிழலாக, இரு கை கோர்த்து, கடற்கரையில் கடலைபோடும் காதலர் தினம் அதாவது valentine day என காதலிக்கும் கப்பல்ஸ் சொல்வார்கள். இது தானே வரலாறு. ஆனால், இந்த வரலாற்றையும் மீறிய ஒரு வரலாறு தமிழகத்தில் நேற்று பதிவாகியுள்ளது. கடந்த வருட டிசம்பர் 5 ஆம் திகதி முதல் நேற்று காலைவரை தமிழகத்தில் அரங்கேறிவந்த ஆட்சி ஆசை மற்றும் மக்களால் சகித்துக் கொள்ள முடியாத பேன்சி கம்படிசன் என அனைத்துக்கும் அப்பாடா முடிஞ்சிச்சிடா சாமி.... என பெருமூச்சு விடும் அளவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. பெரும்

அதாவது, ஜெயலலிதா டிசம்பர் 5 ஆம் திகதி இயற்கையாக மறைந்ததை அடுத்து (அப்படித் தான்ப்பா சொல்லிக்கிறாங்க.) டிசம்பர் 31 ஆம் திகதியன்றே வி.கே. சசிகலா அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக சின்னம்மா எனும் பட்டத்துடன் அமர்த்தப்பட்டார்.

அதுவரை அமைதியான புன்னகையுடனும் அலங்கோலமான சாரி மடிப்புடனும் வலம்வந்து கொண்டிருந்த இவர், திடீரென ஜெயலலிதா போல் உடையணிந்து, தலை சீவி கொண்டை வைத்து, கைக்கடிகாரம் கட்டி, அவரைப் போலவே பொட்டு வைத்து, ஜெயலலிதா அணிந்திருந்த பச்சைக் கல் வைர மோதிரத்தை அணிந்து, அவரின் நாற்காலியிலேயே அமர்ந்து, அவரது செருப்பைப் போலவே போட்டு, இரட்டை விரல் சின்னத்தை காண்பித்து, அவரது காரிலேயே பயணம் செய்து.... ஸ்ப்பா முடியல, மூச்சு வாங்குது. இத்தனையும் செய்து அசல் ஜெயலலிதாவாகவே மாறிவிட்டார் என்று தான் கூறவேண்டும்.

றைத்தண்டனையும் தலா 10 கோடி ரூபா அபராதமும் விதித்து 1000 பக்கங்களைக் கொண்ட வரலாற்றுத் தீர்ப்பினை வழங்கினார்கள்.

இதனால், கடந்த 40 நாட்களாக சசிகலாவால் மேற்கொள்ளப்பட்டுவந்த முதல்வராகும் முயற்சி தவிடுபொடியாக்கப்பட்டுள்ளதுடன் இனி 10 ஆண்டுகளுக்கு எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த ஜெயலலிதா, மரணம் அடைந்த காரணத்தினால் அவரை இந்த வழக்கிலிருந்து உயர்நீதிமன்றம் விடுதலையும் செய்தது.

சரி, இந்த வழக்கின் பின்னணி தான் என்ன? அதாவது, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 வரை தமிழகத்தில் முதல்வராக இருந்த ஜெயலலிதா, தனது வருமானத்துக்கும் அதிகமாக ரூபா 66 கோடியே 64 இலட்சம் சொத்துக்களை குவித்தார் என்று பா.ஜ.கவின் மூத்த

முதல்வர் என்ற நினைப்புடன் இவரது பதவியேற்புக்கான ஏற்பாடுகள் அ.தி.மு.க தொண்டர்களால் அரங்கேறி வந்தபோதே, தன்னை மிரட்டித் தான் இராஜினாமா கடிதத்தில் சசிகலா கையொப்பத்தைப் பெற்றுக் கொண்டார் என்று ஜெயலலிதா


சுதாகரன்


இளவரசி

ளைத் தாண்டி சமூக வலைத்தளங்களிலும் இந்த சசிகலா கடுமையாக விமர்ச்சிக்கப்பட்டமையும் எதிர்க்கப்பட்டமையும் சமூகவலைத்தள பிரியர்களுக்கு தெரியாமல் இல்லை.

10 ஆம் தரம்வரை மட்டுமே கல்வி கற்ற, அரசியலில் முன் அனுபவம் துளியுமற்ற, ஜெயலலிதாவுக்கு வெறும் உதவியாளராக இருந்த நான், எப்படியாவது தமிழ் நாட்டின் முதல்வராகித் தான் விடுவேன் என இறுதிவரை உறுதியாக இருந்த சசியின் அந்த தைரியத்தை மறுபுறத்தில் பாராட்டியேதான் ஆகவேண்டும்.

ஆனால், இத்தனை முயற்சிகள் எடுத்தும் என்னதான் பயன்? இறுதியில் இரும்புச்



பாலும், இவ்வளவு பில்டப்புகளுடன் நாம் எதனைக் கூற விளைகிறோம் என நீங்கள் ஊகித்திருக்கக் கூடும்.

ஆம். சின்னம்மா என அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒருசிலரால் அன்போடு அழைக்கப்பட்டுவந்த வி.கே. சசிகலாவுக்கு சொத்துக்குவிப்பு வழக்கில் நான்கு வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து இந்திய உயர்நீதிமன்றம் நேற்று காலை சரியாக 10.42 மணியளவில் அதிரடித் தீர்ப்பினை வெளியிட்டது.

பாரதிய ஜனதா கட்சி, காங்கிரஸ் கட்சியைத் தொடர்ந்து இந்தியாவில் மிகப்பெரிய மூன்றாவது கட்சியாகத் திகழும் அ.தி.மு.கவின் பொதுச் செயலாளரான முன்னாள் தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதாவின் மறைவை அடுத்து தான் தமிழகத்தில் அந்த நாடகம் அரங்கேற ஆரம்பித்தது.

30 வருடங்களுக்கு மேலாக ஜெயலலிதாவின் உதவியலாளராக இருந்த ஒருவர் திடீரென முதல்வராகி தமிழ்நாட்டிலுள்ள 7 அரைக் கோடி மக்களையும் ஆட்சி செய்யும் அளவுக்கு விஸ்வரூபம் எடுத்தால் எப்படியிருக்கும்? இலங்கையில் இருக்கும் எமக்கே இந்தச் செய்தி இடியாக இருக்கின்றதே.அப்படியானால் தமிழ்நாட்டில்?

அவருக்கு மட்டும் தகுந்த வயதும், தமிழ்நாட்டில் சிறப்பான வைத்திய நிபுணர்களும் இருந்திருந்தால் பிளாஸ்டிக் சேர்ஜரி மூலம் ஜெயலலிதாவாகவே இந்த சசிகலா மாறியிருந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்த கூத்துகளுக்கெல்லாம் அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்களும் (எம்.எல்.ஏ) எம்.பிக்களும் ஆதரவு என்பதைத் தான் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

ஜெயலலிதாவுக்குப் பின்னர் தமிழக முதல்வராக பொறுப்பேற்ற ஜெயலலிதாவின் தீவிர விசுவாசியான ஓ.பன்னீர்செல்வம் கூட கடந்த 7 ஆம் திகதிவரை இந்த விடயம் தொடர்பில் மௌனம்காத்து தான் வந்தார். எனினும், தனது முதல்வர் பதவிக்கே இந்த சின்னம்மாவால் ஆபத்து என கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற சட்டசபைக் கூட்டத்தில் தெரியவந்தவுடன், சுதாகரித்துக்கொண்டு சசிக்கு எதிரான தனது முதல் அடியை கடந்த 7 ஆம் திகதி மெரினாவிலுள்ள ஜெயலலிதா சமாதிக்கு முன்னிலையில் எடுத்து வைத்தார். இந்த ஓ.பி.எஸ். அன்றிலிருந்து சூடுபிடிக்க ஆரம்பித்தது தமிழ்நாட்டு அரசியல் களம்.

யாரும் எதிர்பாராத திருப்பங்கள், அதிடிரக் கருத்துக்கள், அணி தாவல்கள் என தமிழ் நாடே பெரும் பரபரப்பாகத் தான் கடந்த ஒருவாரமாகக் காணப்பட்டது. இவ்வாறு உட்கட்சிப் பூசல்கள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையிலேயே நேற்று செவ்வாய்க்கிழமை தமிழகத்தில் இந்த அதிரடி இடம்பெற்றது.

21 ஆண்டுகளாக இடம்பெற்றுவந்த சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர்களை குற்றவாளிகள் என அறிவித்த உயர்நீதிமன்ற நீதிபதிகளான பினாக்கி சந்திர கோஷ், அமிதவ ராய் ஆகிய இருவரும், இவர்களுக்கு நான்கு ஆண்டுகள் சி

தலைவர்களுள் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி சென்னை உயர்நீதிமன்றில் தொடுத்த வழக்குக்கு இணங்க, தமிழ்நாட்டு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் ஜெயலலிதா, சசிகலா, வளர்ப்பு மகன் சுதாகரன், சசிகலாவின் உறவினர் இளவரசி ஆகியோருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

நீண்ட நாட்களாக விசாரணை செய்யப்பட்ட இந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பு 2014 செப்டம்பர் 27 ஆம் திகதியன்று பெங்களுர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜான் மைக்கேல் டி குன்ஹாவினால் வெளியிடப்பட்டது.

இதில், ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட நால்வருக்கும் தலா 4 ஆண்டுகள் சிறை தண்டனையும் ஜெயலலிதாவுக்கு ரூபா 100 கோடியும், சசிகலா உள்ளிட்டோருக்கு ரூபா 10 கோடியும் அபராதம் விதிக்கப்பட்டது.

இதனை எதிர்த்து மறைந்த ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்ட நால்வராலும் கர்நாடக உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையிட்டு மனுவை விசாரணை செய்த நீதிபதி குமாரசுவாமி 2015 ஆம் ஆண்டு மே 11 ஆம் திகதி நால்வரையும் நிரபராதிகள் என்று அறிவித்து விடுதலை செய்தார்.

இந்த விடுதலைத் தீர்ப்பினை எதிர்த்து சுப்பிரமணியன் சுவாமி, தி.மு.கவின் செயலாளரான அன்பழகன் ஆகியோர் கடந்த ஜுலை மாதத்தில் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு தொடர்பிலான விசாரணையின் தீர்ப்பே நேற்றைய தினம் வெளியாகி இவ்வாறு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் இந்த தீர்ப்பு தொடர்பில் இலங்கையர்கள் இவ்வளவு ஆர்வமாக இருந்தமைக்கு சசிகலா எனும் ஒருவர் தான் முற்றுமுழுதான ஒரே காரணமாக இருக்கிறார்கள். ஜெயலலிதாவின் தோழி என கூறப்பட்டுவந்த இவர் திடீரென பதவி ஆசையில் போட்ட ஆட்டங்கள் தான் எம்மையும் தமிழகத்தையும் கூர்ந்து பார்க்க வைத்தது.

முதல்வர் பன்னீர் செல்வத்தின் முன்மொழிவுக்கு இணங்க, இவர் சட்டசபைத் தலைவராக கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தெரிவு செய்யப்பட்டார். தமிழகத்தில் மீண்டும் ஒரு பெண்

சமாதியில் மேற்கொண்ட 40 நிமிட கடும் தியானத்துக்கு பின்னர் ஓ.பி.எஸ். அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டார். மேலும் சசிகலா குடும்பத்தினர் மீதும் இவர் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

தமிழக அரசியலில் இந்தக் கருத்துக்கள் கொந்தளிப்பை ஏற்படுத்தியதை அடுத்து, ஓ.பி.எஸ். அ.தி.மு.கவின் பொருளாளர் பதவியிலிருந்தும் கட்சியின் பொதுச் செயலாளரான சசிகலாவினால் நீக்கப்பட்டார்.

பின்னர் மீண்டும் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற சட்டசபைக் கூட்டத்தைத் தொடர்ந்து அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் அனைவரும் சொகுசு பஸ்ஸின் ஊடாக கூவத்தூரிலுள்ள தனியார் சொகுசு விடுதியில் தங்கவைக்கப்பட்டார்கள். இவர்களைப் பார்க்க ஊடகங்களுக்கு மட்டுமன்றி உறவினர்களுக்குக் கூட தடா விதிக்கப்பட்டிருந்தமையால், இச்செயற்பாடு சசி மீதான வெறுப்புக்கு மேலும் அனல் ஏற்றியது.

இவ்வாறு சசிகலா அணி- ஓ.பி.எஸ். அணி என அ.தி.மு.கவினர் பிரிந்ததையடுத்து அணித்தாவல் படலங்களும் அடுத்தடுத்ததாக இடம்பெற்றன. சசிகலா அணியில் இருந்தவர்கள் ஓ.பி.எஸ். பக்கம் வருவதும், அம்மா எனப்படும் ஜெயலலிதாவின் ஆதரவாளர்களாக இருந்தவர்கள் சின்னம்மா என சசியை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவதுமாக தமிழ்நாட்டு அரசியலே தலை கிழாகத் தான் கடந்தவாரம் இருந்தது. எதற்காக? எல்லாம் இந்தப் பாழாய்போன பதவிக்காகத் தான்.

70 நாட்களுக்கு மேலாக ஜெயலலிதா அப்பலோ மருத்துவமனையில் இருந்த போது ஒரு ஊடகசந்திப்பைக் கூட நடத்தாத இந்த சின்னம்மா, முதல்வர் பதவி என வந்தவுடன் மட்டும் இரவோடு இரவாக ஊடகங்களை சந்திக்கிறார். எம்.எல். ஏக்களுடன் கலந்துரையாடுகிறார்.

தமிழக ஆளுநர் வித்யாசாகரை சந்தித்து உடனடியாக ஆட்சியமைக்க உரிமை கோருகிறார் என்று கடுமையாக விமர்சிக்கப்பட்டது. தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் என ஊடங்க

சட்டகம் அமைத்த வெள்ளை அறைக்குத் தானே செல்லவேண்டியதாயிற்று. உண்மையில் நேற்றைய தினம் வெளியான இத்தீர்ப்பானது சொத்து ஆசை கொண்டோருக்கு மட்டுமன்றி பதவி ஆசைக் கொண்டோருக்கும் ஒரு சிறந்த பாடமாக அமைந்துள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

அத்தோடு, இத்தனைக் காலமாக அம்மா. அம்மா. என ஜெயலலிதா புராணம் பாடி, திடீரென சின்னம்மா பக்தர்களாக மாறிய நாஞ்சில் சம்பத், சரஸ்வதி, வளர்மதி, கருணாஸ் உள்ளிட்டோர் அடங்கலாக கூவத்தூரில் தங்கவைக்கப்பட்டிருந்த எம்.எல்.ஏக்கள் அனைவரும் தமது திருமுகங்களை எங்கே வைத்துக் கொள்வார்கள் எனும் சந்தேகமும் மக்களிடத்தில் எழாமல் இல்லை.

மேலும், முதல்வராக ஆட்சிபுரியும் அளவுக்கு சசிக்கு தகுதியில்லை எனும் காரணத்தினால் தான் இவ்வளவு எதிர்ப்புக்கள் அவருக்கு எதிராக எழுந்ததே ஒழிய, ஓ.பன்னீர்செல்வம் சிறப்பாக ஆட்சி நடத்தக் கூடியவர் எனும் காரணத்துக்காக எழவில்லை என்பதையும் இங்கு சுட்டிக் காட்டியே ஆகவேண்டும்.

ஏனெனில், இவரும் அப்பலோ இரகசியங்கள் உள்ளிட்ட இதர சில முக்கிய விடயங்கள் தொடர்பில் இதுவரை மௌனம் காத்துவருகின்றமை தமிழக மக்களிடத்தில் ஒரு குறையாகவே இன்னும் இருக்கின்றது.

சரி. எது எப்படியோ. இந்த தீர்ப்பின் மூலம் தமிழ் நாடு தப்பித்து விட்டதே போதும்பா.

இந்தத் தீர்ப்பு மட்டும் சசி உள்ளிட்ட அவரது சகாக்களுக்கு சாதகமாக அமைந்திருந்தால் பன்னீர் செல்வம் மட்டுமன்றி தமிழ் நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதால், உயர்நீதிமன்றத்தின் இந்த அதிரடித் தீர்ப்பினை நாமும் வரவேற்கின்றோம்.

ஆமா. இலங்கையிலும் பதவி ஆசை பிடித்த, அளவுக்கு அதிகமாக சொத்துக்களை சேமித்து வைத்த சிலர் இருக்கிறார்கள் தானே.... அட மஹிந்த இல்லப்பா, பொதுவா சொன்னேன்.

---

# இமாம் நூர்ஸியும்...

(07 ஆம் பக்க தொடர்ச்சி)

ஸ்பார்டா எனும் பிரதேசத்தில் அமைந்திருந்த பார்லா என்ற பகுதிக்கு நாடுகடத்தியது. இங்கு வெளித்தொடர்புகள் அனைத்தும் தடை செய்யப்பட்டு இமாமவர்கள் தனிமையில் விடப்பட்டிருந்தார்.

ஆயினும், தனக்குக் காவலர்களாக நியமிக்கப்பட்டிருந்தவர்களை தனது சிந்தனைகள் மூலம் கவர்ந்திழுத்துக் கொண்டார் இமாமவர்கள். பின்னர், இமாமவர்களின் மாணவர்கள் அனுப்பும் கையெழுத்துப் பிரதிகளை சரிபார்க்கும் பணியைச் செய்து வந்தார். தொடர்ந்து எட்டு வருடங்கள் இமாமவர்கள் இங்கு தான் வாழ்ந்து வந்தார்.

1923 இல் அரபு மொழியில் அதான் சொல்வது தடை செய்யப்பட்டபோது, இமாமவர்களும் அவரது மாணவர்களும் பள்ளிவாசலுக்குள் அரபு மொழியிலேயே அதான் சொல்லி வந்தனர். எனவே, இமாமவர்களையும் அவரது பல மாணவர்களையும் அரசாங்கம் கைது செய்தது. இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட இவர்களில் இமாமவர்களுக்கும் அவரது 120 மாணவர்களுக்கும் 11 மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக இரகசிய இயக்கமொன்றை உருவாக்குகிறார் என்ற குற்றச்சாட்டின்பேரில் 1935 இல் இமாம் பதீஉஸ்ஸமான் நூர்ஸி மீண்டும் கைது செய்யப்பட்டார். அப்போது அவர், நான் பொது பாதுகாப்புக்குத் தீங்கிழைப்பதற்காக மதத்தைப் பயன்படுத்துவதாக நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்கள். ஆனால் நான் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே இஸ்லாமியக் கலைகளில் ஆய்வுகள் செய்கிறேன் என்று வாதாடினார். இந்த விசாரணைகளின் பின்னர், காஸ்டமூனோ என்ற பிரதேசத்துக்கு இமாமவர்கள் நாடுகடத்தப்பட்டார். இந்தக் காலப் பகுதியில் இஸ்லாமியக் கலைகளில் ஆய்வுகளை செய்வதிலும் எழுதுவதிலும் இமாமவர்கள் ஈடுபட்டார்கள். இந்த எழுத்துக்கள் அனைத்தும் பல்கலைக்கழகங்கள், இராணுவ முகாம்கள் என அனைத்து இடங்களையும் சென்றடைந்தன. இதை ஒரு எச்சரிக்கையாகப் பார்த்த முஸ்தபா கமால், கிலாபத்தை வீழ்த்தி மதச்சார்பற்ற துருக்கியை உருவாக்குவதற்கு உதவியளித்த மாசோனிய இயக்கத்தின் முக்கியஸ்தர்களுடன் இணைந்து இமாமவர்களை மீண்டும் விசாரிப்பதற்கான திட்டத்தை தீட்டினார். இதன்படி இமாமவர்கள் மீண்டும் விசாரிக்கப்பட்டார். இவ்வாறு பல முறை விசாரிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட இமாமவர்களுக்கு, 1950 இல் ஜலால் பாயார் தலைமையிலான ஜனநாயக கட்சி ஆட்சிக்கு வந்ததன் பின்னர்தான் சுதந்திரமாக செயற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தன. 1950 இல் நடைபெற்ற தேர்தலில் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றது. ஜனநாயகக் கட்சி நடத்திய அரசாங்கம், அடைக்கப்பட்டிருந்த இமாம் பதீஉஸ்ஸமான் நூர்ஸிக்கு பயணிப்பதற்கான சுதந்திரத்தை வழங்கியிருந்தது. இதனைப் பயன்படுத்திக் கொண்ட இமாமவர்கள், தனது மாணவர்களை வழிப்படுத்துவதிலும் பயிற்றுவிப்பதிலும் ஈடுபட்டார். 1952 இல் இஸ்தான்பூல் சென்றடைந்த இமாமவர்களுக்கு, அவரது ரிஸாலா ஏ நூரை பதிப்பிக்கும் அனுமதியையும் அரசாங்கம் வழங்கியது.

ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜலால் பாயாருக்கு வாழ்த்து மடலொன்றை இமாமவர்கள் அனுப்பி வைத்தார். பதிலுக்கு ஜலால் பாயாரும் இமாமவர்களுக்கு நன்றிக் கடிதமொன்றை அனுப்பி வைத்தார். இமாமவர்கள் பிரதமர் அத்னான் மன்தரீஸுக்கும் வாழ்த்து மடலொன்றை அனுப்பி வைத்தார். அந்த வாழ்த்து மடலில் அவருக்கு சில உபதேசங்களை குறிப்பிட்டு அனுப்பினார். இமாம் பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி, பிரதமர் அத்னான் மன்தரீஸுக்கு அனுப்பிய கடிதத்தில், மதச்சார்பின்மை மக்களை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் என்றும் உண்மையின் மீதெழும் வெளிவிவகாரக் கொள்கையொன்றைப் பின்பற்றுமாறும் குறிப்பிட்டிருந்தார். அத்தோடு, ஐரோப்பிய கலாசாரம் ஆசை, பொறாமை, ஆக்கிரமிப்பு உணர்வு ஆகியவற்றின் மீதே உருவாகியுள்ளது. அது இறைவனை விசுவாசிப்பதில்லை. எனவே, ஐரோப்பிய கலாசார வழிமுறையை அடிப்படையாகக் கொண்ட சீர்திருத்தங்கள் மூலம் முன்னேற்றங்களைக் கொண்டு வர முடியாது என்றும் குறிப்பிட்டிருந்தார்.ஜனநாயகக் கட்சியின் ஆட்சிக் காலப் பகுதியில் இமாம் பதீஉஸ்ஸமான் நூர்ஸி மீதான கெடுபிடிகள் குறைந்திருந்தபோதும், இமாமவர்கள் எழுதிய முர்ஷிதுஷ் ஷபாப் என்ற நூல் மத அடிப்படைகளின் மீதான ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முயலுவதாகக் குற்றம்சாட்டப்பட்டு, இமாமவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். இமாமவர்கள் தனது முழு வாழ்வையும் மிகவும் சாதாரணமாகவே அமைத்துக் கொண்டிருந்தார். ஸதகா, ஸகாத், பரிசுப் பொருட்கள் என அவருக்குக் கிடைக்கும் அனைத்தையும் அவர் பெறாதிருந்தார். மக்களிடமிருந்து சொத்துக்களை சேர்த்துக் கொள்கிறார்கள் என்பதுவே தற்கால அறிஞர்களுக்கும் அழைப்பாளர்களுக்கும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு என்று அதற்கு விளக்கம் கூறுவார் இமாமவர்கள்.

இஸ்லாமிய ஆட்சி என்பது பலப் பிரயோகத்தின் மூலம் உருவாக்கப்பட முடியாது என்றே இமாமவர்கள் கருதினார். மக்களை நல்வழிப்படுத்தி சிறந்ததொரு அடித்தளத்தை இட வேண்டும். இஸ்லாத்தை பற்றிப் பிடிக்கும் பெரும்பான்மையொன்று உருவாக வேண்டும். அவர்கள் இஸ்லாமிய ஆட்சியை வேண்ட வேண்டும் என்பதுவே இமாமவர்களது சிந்தனையாக இருந்தது. துருக்கியின் மதச்சார்பற்ற அரச ஒழுங்குக்குள்ளால் மிகுந்த போராட்டங்களுக்கு மத்தியில் செயற்பட்டு, துருக்கியர் மத்தியில் அல்குர்ஆனின் சிந்தனைகளையும் கருத்துக்களையும் வேரூன்றச் செய்த இமாம் பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி அவர்கள் 1960 மார்ச் 23 ஆம் திகதி மரணித்தார்கள்.

*****

இந்தப் பத்தியில் இமாம் பதீஉஸ்ஸமான் பற்றியும் அவரது ரிஸாலா ஏ நூர் பற்றியும் நோக்கினோம். அடுத்த பத்தியில் துருக்கியின் மதச்சார்பற்ற அரச ஒழுங்குக்குள்ளால் சில மாற்றங்களைக் கொண்டு வந்து முஸ்லிம்களுக்கு சில சுதந்திரங்களைப் பெற்றுக் கொடுத்த ஜனநாயகக் கட்சியின் ஆட்சி (1950-1960) குறித்தும் அதன் தலைவர் ஜலால் பாயார், அப்போதைய பிரதமர் அத்னான் மன்தரீஸ் ஆகியோர் குறித்தும் நோக்கவுள்ளோம்.

நவமணி



## சொத்துக்குவிப்பு வழக்கு விவகாரம்:

# மூவரும் குற்றவாளிகளே!
# உச்ச நீதிமன்று அதிரடி தீர்ப்பு



- ★ அஸ்தமித்தது சசியின் முதலமைச்சு கனவு
- ★ 4 ஆண்டுகள் சிறை; ரூ.10 கோடி அபராதம்
- ★ தயார் நிலையில் பெங்களூர் அக்ரஹார சிறை
  கொண்டாட்டத்தில் ஓ.பி.எஸ். - தீபா ஆதரவாளர்கள்
- ★ ஓ.பி.எஸ் உட்பட 21 அமைச்சர்கள்
  அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கம்
- ★ சட்டமன்ற தலைவராக எடப்பாடி பழனிச்சாமி தேர்வு
- ★ மறுசீராய்வு மனு தாக்கல்? - தம்பிதுரை தகவல்
- ★ கூவத்தூரில் 144 தடை










மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோர் மீதான சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்ட 3 பேரும் குற்றவாளிகள் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஜெயலலிதா மரணமடைந்துவிட்டதால் வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்த வழக்கில் 21 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பினாகி சந்திர கோஸ், அமிதவ் ராய் ஆகியோர் தீர்ப்பு வழங்கினர்.

இரண்டு நீதிபதிகளுமே ஒரே மாதிரியான தீர்ப்பை வழங்கினர். சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா உள்ளிட்ட மூவரும் குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கினர். கர்நாடகா உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி வழங்கிய தீர்ப்பை ரத்து செய்வதாக நீதிபதிகள் தெரிவித்தனர். கர்நாடகா சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் டி குன்ஹா வழங்கிய தீர்ப்பு அப்படியே ஏற்கப்படுகிறது என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகிய மூவருக்கு 4 ஆண்டு சிறை மற்றும் ரூ.10 கோடி அபராதம் எனவும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அத்தோடு, இம்மூவரையும் மாலைக்குள் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மூவரும் சரணடைந்த பின்னர் பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பவர் என தகவல்கள் கசிந்துள்ளன.

**அஸ்தமித்த முதலமைச்சு பதவி**

எப்படியும் முதல்வராகி விட வேண்டும் என்ற பதவி வேட்கையிலிருந்த சசிகலாவால் அடுத்து வரும் 10 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது. இதனால் முதல்வர் பதவியை தட்டிப் பறிக்கும் வேட்கையில் குறியாக இருந்த சசிகலாவின் ஆசை இறுதி அத்தியாயத்தை எட்டிவிட்டுள்ளது என அரசியல் வட்டாரங்கள் சலசலக்கின்றன.

**கொண்டாட்டத்தில் ஓ.பி.எஸ் - தீபா ஆதரவாளர்கள்**

உச்ச நீதிமன்றம் தீர்ப்பையடுத்து பல்வேறு இடங்களில், ஓ.பன்னீர் செல்வம், தீபா ஆதரவாளர்கள் பட்டாசுகள் கொளுத்தியும், இனிப்பு வழங்கியும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் "சசிகலா குற்றவாளி, தமிழ்நாடு காப்பற்றப்பட்டது" என்று கோஷமெழுப்பியதுடன், பட்டாசு வெடித்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

தீபா இல்லத்தில் கூடிய அவரது ஆதாவாளர்கள், தீர்ப்பை வரவேற்று கொண்டாடியுள்ளனர். அத்துடன் இதுகுறித்து தீபா கூறுகையில் "இது தமிழகத்துக்கு நல்லநாள் சசிகலா பதவி வெறிபிடித்தவர்" என தெரிவித்துள்ளார்.

**ஓ.பி.எஸ். நீக்கம்**

சசிகலா சிறை செல்வது உறுதியாகியுள்ளதால், அவருக்கு பதிலாக அ.தி.மு.க சட்டமன்ற கட்சித் தலைவராக எடப்பாடி பழனிச்சாமி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கூவத்தூரில் நடைபெற்ற அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் எடப்பாடி பழனிச்சாமி தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேலும் அதிமுகவின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து ஓ.பன்னீர்செல்வத்தை நீக்கி சசிகலா உத்தரவிட்டுள்ளார். இதனையடுத்து எடப்பாடி பழனிச்சாமி சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுக் கடிதத்தோடு ஆளுநரை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோருவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

**முக்கிய நிர்வாகிகள் நீக்கம்**

முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்திற்கு ஆதரவளித்த நிர்வாகிகள் அனைவரும் கூண்டோடு கட்சியிலிருந்து நீக்கப்படுவதாக அ.தி.மு.க. தற்காலிக பொதுச் செயலாளர் சசிகலா அறிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பாராளுமன்ற எம்.பிக்களை தவிர பன்னீர்செல்வத்திற்கு ஆதரவளித்த முக்கிய நிர்வாகிகளான கே.பி.முனுசாமி, பொன்னையன், நத்தம் விஸ்வநாதன், அமைச்சர் மாஃபா பாண்டியராஜன் , பி.ஹெச்.பாண்டியன், மோகன், பரிதி இளம்வழுதி, பொன்னுசாமி, முத்துராமலிங்கம், முத்துச்செல்வி, மனோஜ் பாண்டியன், ஜே.சி.டி.பிரபாகர், ஐயப்பன், எஸ்.கே.செல்வம், ராஜேந்திர பிரசாத் உள்ளிட்ட 21 பேரை கட்சியின் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்படுவதாக சசிகலா அறிவித்துள்ளார்.

மேலும் பன்னீருக்கு ஆதரவு அளித்த முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் அனைவரும் அதிமுகவிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். கட்சியின் கொள்கை, குறிக்கோளுக்கு முரணான வகையில் செயற்பட்டதால் அனைவரையும் நீக்குவதாக சசிகலா அறிவித்துள்ளார்.

**மறுசீராய்வு மனு தாக்கல்?**

இந்நிலையில் வழக்கில் சசிகலா மற்றும் இருவருக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை எதிர்த்து மறுசீராய்வு மனு தாக்கல் செய்யப்படும் என மக்களவை துணை சபாநாயகரான தம்பிதுரை தெரிவித்துள்ளார்.

டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய சபாநாயகர் தம்பிதுரை, "அ.தி.மு.கவிற்கு ஓ.பன்னீர்செல்வம் துரோகம் இழைத்துவிட்டார். பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு சசிகலா தரப்புக்கு தான் உள்ளது. விரைவில் ஆளுநர் தங்களை ஆட்சியமைக்க அழைப்பார்" என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**கூவத்தூரில் 144 தடை**

மேலும் காஞ்சிபுரம் மாவட்டம் கூவத்தூரில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அசாதரண சூழல் நிலவுவதால் கல்பாக்கம் முதல் கூவத்தூர் பேட்டை வரையிலான பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

அ.தி.மு.க., எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் கடந்த 5ஆம் திகதி முதல் கூவத்தூரிலுள்ள சொகுசு விடுதியில் சிறைவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தற்காலிக மனக்கசப்புகளை மறந்து ஒற்றுமையாக செயற்பட வாருங்கள்

## எம்.எல்.ஏக்களுக்கு ஓ.பி.எஸ். அழைப்பு



தற்காலிக மனக்கசப்பை மறந்து ஒற்றுமையாக செயற்பட வாருங்கள் என எம்.எல். ஏக்களுக்கு ஓ.பன்னீர்செல்வம் அழைப்பு விடுத்துள்ளார்.

ஓ.பி.எஸ்.க்கு ஆதரவளிக்கும் எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது. இத்தொகை மேலும் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு அரசியல் பிரமுகர்கள் மற்றும் திரைதுறை பிரபலங்கள் என தமிழகமெங்கும் ஒபிஎஸ்ஸுக்கான ஆதரவு வலுத்துவருகின்றது.

இந்நிலையில் சொத்து குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் சசி, இளவரசி, சுதாகரன் உள்ளிட்டோருக்கு விதிக்கப்பட்ட தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் அதிரடி தீர்ப்பு வெளியாகியுள்ள நிலையில், சசிக்கு எதிராக போர்க் கொடி உயர்த்தியுள்ள முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

செய்தியாளர்கள் மற்றும் மக்கள் மத்தியில் பேசிய அவர், தற்போதைய சூழலில் கட்சியின் நலனை கருத்தில் கொண்டு அதிமுக எம்.எல். ஏக்கள் முடிவெடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் ஒன்றுபட்டு கட்சிக்கு ஊறு நேர்ந்துவிடாமல் காக்க வேண்டும். தற்காலிக மனக்கசப்பை மறந்து ஒற்றுமையாக செயற்பட வாருங்கள் என எம்.எல். ஏக்களுக்கு ஓ.பன்னீர்செல்வம் அழைப்பு விடுத்துள்ளார். எதிரிகள் நாம் பிளவுபடுவதை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர்.

இந்த நேரத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என கூறியுள்ளார். மேலும் தமிழகத்தில் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நல்லாட்சி தொடர அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் மனசாட்சிப்படி தற்போது முடிவெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். தமிழக மக்கள் மற்றும் அதிமுக அடிமட்ட தொண்டர்களின் விருப்பத்திற்கேற்ப முடிவெடுப்பது சட்டமன்ற உறுப்பினர்களின் கடமை என்றார்.

## உலகச் செய்திகள்

# தாய்வானில் சுற்றுலா பஸ்ஸில் தீ: 32 பேர் பலி; 12 பேர் படுகாயம்



தாய்வானில் சுற்றுலா பஸ் மோதி தீப்பிடித்ததில் 32 பேர் உடல் கருகி பலியாகினர். 12 பேர் தைபே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தாய்வான் தலைநகர் தைபே அருகே 44 பேருடன் பயணித்த சுற்றுலா பஸ்சொன்று வீதியின் குறுக்கே வைக்கப்பட்டிருந்த தடுப்பின் மீது மோதி கவிழ்ந்தது. அப்போது மோதிய வேகத்தில் பஸ் தீப்பிடித்தது. இந்த விபத்தில் 30 பேர் அதே இடத்தில் உடல் கருகி பலியாகினர். 2 பேர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 32 ஆனது.

பலியானவர்களில் 20 முதல் 60 வயது உடையவர்கள் அடங்குவர். அவர்கள் அனைவரும் தாய்வானை சேர்ந்தவர்கள் மேலும் 12 பேர் தைபே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# பஞ்சாப்பில் தற்கொலை தாக்குதல்; 16 பேர் பலி: 40 பேர் படுகாயம்



பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தில் சட்டப்பேரவைக்கு வெளியே நடந்த போராட்டத்தில் தற்கொலை படை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 3 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் அரசு அண்மையில் சர்ச்சைக்குரிய மருந்து விதிமுறைகளை விதித்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கிழக்கு பாகிஸ்தானின் பஞ்சாப் மாநில சட்டப்பேரவைக்கு வெளியே வேதியியல் நிபுணர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதற்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. இருப்பினும், அந்த ஆர்ப்பாட்ட கூட்டத்துக்குள் நுழைந்த தற்கொலைப் படையை சேர்ந்த தீவிரவாதி ஒருவர், தனது உடம்பில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான்.

இந்த கோர சம்பவத்தில் 3 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், 40 பேர் படுகாயமடைந்தனர்.

# மேலும் ஒரு பாக். தலைவருக்கு அமெரிக்கா விசா மறுப்பு



அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் சர்வதேச நாடுகளின் செனட் சபை தலைவர்கள் கூட்டம் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில், இதில் பாகிஸ்தான் சார்பில் அந்நாட்டின் ஜமியத் உலாமா இஸ்லாம் கட்சியின் பொதுச் செயலாளரும், செனட் சபையின் துணை தலைவருமான மௌலானா அப்துல் கபூர் ஹைதரியும், மற்றொருவரும் பங்கேற்பதற்காக இருந்தது. ஆனால், மௌலானாவுக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்து விட்டது.

இந்நிலையில் மௌலானா கட்சியை சேர்ந்தவரும், செனட் உறுப்பினருமான ஹபீஸ் ஹமதுல்லாஹ், தனக்கும் அமெரிக்கா விசா வழங்க மறுத்து விட்டதாக தெரிவித்துள்ளார். மௌலானா, ஹபீஸ் ஆகியோரின் கட்சி, தலிபானுடன் தொடர்பு உடைய கட்சி என்ற எண்ணமே அமெரிக்க விசா மறுப்பு பின்னணியில் உள்ளதாக தெரிகிறது. இந்த விசா மறுப்பு பிரச்சினை தொடர்பாக பாகிஸ்தான் அரசு அதிகாரப்பூர்வமாக எந்த கருத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

## வடகோரியா ஏவுகணை சோதனை:

# ஐ.நா. பாதுகாப்பு சபை கூட்டத்தை கூட்ட வேண்டும்

### அமெ. - ஜப்பான் - தெ.கோரியா கோரிக்கை



ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை கூட்டத்தை உடனடியாக கூட்டி, வடகொரியா ஏவுகணை சோதனை தொடர்பாக விவாதிக்க வேண்டும் என அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் கேட்டுக் கொண்டுள்ளன.

வடகொரியா கடந்த 2006ஆம் ஆண்டு முதல் அணுகுண்டு மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் காரணமாக அந்நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், வடகொரியாவின் இந்த நடவடிக்கைகளுக்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. எனினும் வடகொரியா எதனையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்நிலையில் ஞாயிறன்று கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியுள்ளதாக தகவல் வெளியானது. அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்ற பின்னர் வடகொரியா நடத்திய முதல் ஏவுகணைச் சோதனை இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியதற்கு ஜப்பான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக திடீரென அமெரிக்க ஜனாதிபதி டிரம்பை தொடர்பு கொண்டு பேசிய ஜப்பான் பிரதமர் ஷின்ஜோ அபே,

"வடகொரியாவின் இந்த நடவடிக்கையை பொருத்துக் கொள்ள முடியாது" என தெரிவித்துள்ளார். மேலும் வடகொரியாவின் ஏவுகணை சோதனை குறித்து விவாதிக்கும் வகையில், உடனடியான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் கூட்டத்தை கூட்ட வேண்டும் என அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

## அரிசி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் பிரதிநிதிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி பற்றாக்குறை காரணமாக நெல்லுற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்துவதே இந்த சந்திப்பின் நோக்கமாகும்.

எவ்வாறாயினும் நாடளாவிய ரீதியாக ச.தோ.ச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் பற்றாக்குறையின்றி அரிசி வகைகள் விற்பனை செய்யப்படுவதாக நேற்று வவுனியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அமைச்சர் றிஷாத் பதியூதீன் தெரிவித்தார்.







மேல்மாகாண சபை உறுப்பினர் ஷாபி ரஹீமின் நிதியொதுக்கீட்டில் அத்தனகல்ல திஹாரிய பிரதேச மாதர்களின் மேம்பாட்டுக்கான சுயதொழிற் பயிற்சிப்பாடநெறிகளான சிற்றுண்டிச் செய்கை முறை, கைப்பை, பலவித கைப்பணிப் பொருட்கள் தயாரித்தல் போன்ற பாடநெறிகள் நடாத்தப்பட்டன. இறுதிக் கண்காட்சி கடந்த 11ம் திகதி திஹாரிய அல் அஸ்ஹர் மத்தியக் கல்லூரி வளாகத்தில் நடாத்தப்பட்டு சான்றிதல்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் மாகாண சபை உறுப்பினருடன் பாடசாலை அதிபர் எம்.ஏ.எம். அஸ்மிர் மஸ்ஜிதுன் நூர் பள்ளி இமாம் றம்ஸி, மௌலவி முஜீப், மாதர் சங்கத் தலைவி சரீனா பேகம் மற்றும் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## உம்றா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

புனித மக்கா செல்லவுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் தனக்குச் செய்த அநீதி பற்றி நாளை கிழக்குக் செல்லவிருந்த ஹஸன் அலி அதனை ஒத்திவைத்துவிட்டே சவூதி அரேபியா செல்ல முடிவு செய்துள்ளார்.

தனக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக ஊர் ஊராகச் சென்று விளக்கவுள்ளதாக ஹஸன் அலி திங்களன்று தெரிவித்திருந்தார்.

## ரதன தேரர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் தற்போது கட்சிக்குள் ஆலோசனைகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினரான இவர், அக்கட்சியிலிருந்து வெளியேறி சுயேட்சையாக தற்போது இயங்கி வரும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூடும் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டத்தில் முக்கிய தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. இதன்போது ரத்னதேரரின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி குறித்தும் தீவிரமாக கலந்தாலோசிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மோசே சப்டி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பூமியில் குடியேற்றங்களை அமைக்கும் பணிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டவர். இது தார்மீக கொள்கைகளுக்கும், சர்வதேச சட்டத்துக்கும் எதிரான ஒரு செயலாகும்.

இஸ்ரேல் சட்டவிரோதமாக ஆக்கிரமித்திருக்கின்ற பலஸ்தீனப் பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டும் என்பதற்காக, மேற்குலகிலும், ஆசியாவிலும் புத்திஜீவிகளும், கல்வியியலாளர்களும், இஸ்ரேலை புறக்கணிக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

உலகெங்கும் புத்தஜீவிகளும், கல்வியியலாளர்களும், சிவில் உரிமை செயற்பாட்டாளர்களும், நீதிக்காகவும், குரலற்றோருக்கு ஆதரவாகவும் செயற்பட்டு வருகின்றபோதும், இலங்கையில் அந்த நிலை என்பது குறித்து நாம் ஏமாற்றமடைந்துள்ளோம்

இந்த நிலையில், இலங்கை கட்டடக் கலை நிறுவனம், மோசே சப்டிக்கு வழங்கியுள்ள அழைப்பிதழை வாபஸ் பெற்றால், அது இலங்கை 1948 முதல் பின்பற்றுகின்ற பலஸ்தீன மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கான ஆதரவுக் கொள்கைக்கு ஆதரவளித்த பலம்பொருந்திய செய்தியை வழங்கும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## சசிகலா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

முதல்வர் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோர் மீதான சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்ட 3 பேரும் குற்றவாளிகள் எனவும், மூவருக்கும் 4 ஆண்டு சிறை தண்டனையும் தலா ரூ.10 கோடி அபராதம் விதித்து உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

மேலும் ஜெயலலிதா மரணமடைந்துவிட்டதால் வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அத்தோடு சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகிய மூவரையும் (நேற்று) மாலைக்குள் நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் உச்சநீதிமன்றத்தில் சசிகலா தரப்பில் 4 வாரகால அவகாசம் கோரப்பட்டுள்ளதுடன் அவசர மனு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில், தீர்ப்பை ஏற்கிறோம். அ.தி.மு.க. கட்சியின் பொதுச்செயலாளராக இருப்பதால் கட்சிப் பணிகள் இருக்கின்றன.

அதனை சரி செய்ய வேண்டும். உடல் நிலை சரியில்லை என்பதால் உடல் பரிசோதனைக்கு செல்ல வேண்டும். ஆகையால் 4 வார கால அவகாசம் அளிக்க வேண்டும் என்றும், இதனை அவசர மனுவாக ஏற்று விசாரிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மனு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தபோதும் (பத்திரிகை அச்சுக்கு செல்லும் வரை) தீர்வுகள் வராததால் சசிகலா இன்று சரணடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக தமிழக முதலமைச்சர் பதவியை கைப்பற்றும் முயற்சியில் சசிகலா தீவிரமாக இறங்கினார். முதலமைச்சர் பன்னீர்செல்வத்திடம் கட்டாயப்படுத்தி இராஜினாமா கடிதத்தை வாங்கியதாக முறைப்பாடு எழுந்தது. அதன் பின் தமிழகம் அடுத்தடுத்து இது வரை கண்டிராத பல சம்பவங்கள் அரங்கேறியது. அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வலுக்கட்டாயமாக கூவத்தூரில் சசிகலா தரப்பால் சிறை வைக்கப்பட்டனர். இந்நிலையில் சசிகலாவின் அரசியல் கனவை தகர்த்தெறியும் தீர்ப்பு நேற்று உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

சசிகலா, சுதாகரன், இளவரசி உள்ளிட்டோர் மீதான சொத்து குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பினாகி சந்திரகோஸ், அமித்தவ ராய் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் சசிகலா உள்ளிட்ட மூவருக்கும் பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா அளித்த தீர்ப்பை உறுதி செய்துள்ள நீதிமன்றம், உடனடியாக பெங்களூர் கீழமை நீதிமன்றத்திற்கு சென்று சரணடையுமாறு உத்தரவிட்டது. தண்டனை உறுதி செய்யப்பட்டதையடுத்து மூவரும் சிறைக்கு செல்வது உறுதியாகியுள்ளது. பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் மூவரும் சரணடைந்த பின்னர் பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் வைக்கப்படவுள்ளனர்.

சசிகலாவிற்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளதால், அவரால் அடுத்த 10 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது. அத்தோடு ஜெயலலிதாவின் போயஸ் தோட்டத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். உச்ச நீதிமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பின் காரணமாக சசிகலாவின் அரசியல் வாழ்க்கை தற்போது அஸ்தமனமாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மத்தளை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறு விபத்திற்கு உள்ளாகியுள்ளவர்கள் தனமல்வில பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கபட்டுள்ளது.

சாரதி அனுமதி பத்திரத்தை பெற்று கொள்வதற்காக ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திற்கு வந்து திரும்பி சென்ற வேளையே அவர்கள் இந்த அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளனர்.

காயமடைந்துள்ளவர்களில் பெண்ணொருவரும் அடங்குகின்றனர்.

## ட்ரம்பின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்க பாதுகாப்புத்துறை புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைவரான மைக்கேல் டிரம்ப்பின் தீவிர ஆதரவாளர். இவர், இதற்கு முன்னர் தேசிய பாதுகாப்பு தொடர்பாக டிரம்ப்புக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி வந்ததுடன், அவரது தேர்தல் பிரசார கூட்டங்களில் ஆரம்பநிலை பேச்சாளராக இருந்து வந்துள்ளார்.

டொனால்டு டிரம்ப் அதிபராக பதவியேற்பதற்கு முன்னரே, அமெரிக்கா, ரஷ்யா மீது விதித்திருக்கும் தடைகளை அகற்றுவது குறித்து அமெரிக்க சட்டத்திற்கு எதிரான வகையில், ரஷ்ய தூதரோடு கலந்துரையாடியதாக பிளின் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இந்த குற்றச்சாட்டு தொடர்ந்து சர்ச்சையை ஏற்படுத்தி வந்த நிலையில், மைக்கேல் பிளின் தனது பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார். அவர் தனது ராஜினாமா கடிதத்தில், பதவியேற்புக்கு முன்னதாக ரஷ்ய தூதருடன் பேசியது பற்றி முழுமையான தகவல்களை அளிக்காதமைக்காக அதிபர் டிரம்ப், மற்றும் துணை அதிபர் மைக் பென்சிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

பிளின் ராஜினாமாவைத் தொடர்ந்து, தற்காலிக தேசிய பாதுகாப்பு ஆலோசகராக ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி ஜோசப் கெய்த் கெல்லாக் நியமிக்கப்பட்டிருப்பதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. இவர் 1967-ம் ஆண்டு முதல் 2003-ம் ஆண்டு வரை ராணுவத்தில் பணியாற்றியுள்ளார். 1997ம் ஆண்டு முதல் 1998 வரை 82-வது விமானப் படைப்பிரிவின் தளபதியாக செயல்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மசூறா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சிக்கல்களின்போது கடைப்பிடிக்க வேண்டிய இஸ்லாமிய முறைமைகள் குறித்து அவர்கள் வழங்கியுள்ள ஆலோசனைகளிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஷ் ஷெய்க் ஏ.எல்.எம்.கலீல் மதனி, அஷ் ஷெய்க் எச்.எம்.எம். இல்யாஸ் மற்றும் அஷ் ஷெய்க் எஸ்.எல்.எம்.ஹனிபா மதனி ஆகியோர் கட்சியின் 27ஆவது பேராளர் மாநாட்டுக்கு முன் கடந்த 11 ஆம் திகதி கட்சியின் தேசிய தலைவர் றவூப் ஹக்கீமுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கட்சியின் தீர்மானங்கள் இஸ்லாமிய முறைப்படி கலந்துரையாடல்களினூடாக மேற்கொள்ளப்படும்போது முரண்பாடுகளைத் தவிர்ந்துகொள்ளலாம். கட்சியின் யாப்பில் அல்குர்ஆன், ஹதீஸின் அடிப்படையில் செயற்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதால் உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகள் மது, இலஞ்சம், ஊழல், விபச்சாரம் போன்றவற்றை தவிர்ந்து கொள்ள வேண்டும். கட்சியின் வரப்பிரசாதங்கள் மற்றும் சலுகைகள் முறையாக போராளிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். தனிப்பட்ட முடிவுகளை தவிர்த்து சூரா அடிப்படையில் முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கட்சியின் ஆரம்பம் முதல் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் கௌரவிக்கப்படல் வேண்டும். புதிதாக இணைத்துக்கொண்டவர்களும் மதிக்கப்படல் வேண்டும். கட்சியின் பிரதிநிதிகள் அனைவரும் பகிரங்கமாக ஷரீஆவை பின்பற்றும் பக்குவமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

## அரசாங்கம் சைடமை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உயர்த்திக்கொள்ள முடியாவிட்டால் எதிர்வரும் காலங்களில் உயர்த்திக் கொள்ள காலம் வழங்கப்படுவதில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை என்றும் சைடமை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தவேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அரச மருத்துவ அதிகாரிகள் முன்மொழியத் திட்டமிட்டுள்ள முன்மொழிவிலேயே மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு மாணவரிடம் 120 இலட்சம் ரூபாய்கள் வீதம் 800 மாணவர்களிடம் 96 ஆயிரம் மில்லியன் பணத்தைப் பெற்றுக்கொண்டும் போதிய கல்வியை வழங்க முடியாதவர்களிடம் இனியும் தரஉயர்த்துவார்கள் என்றும் எதிர்பார்க்கமுடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் துணைச் செயலாளர் டாக்டர் சந்தன தர்மரத்ன தெரிவித்ததாவது,

கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து சைடமின் தரத்தை உயர்த்துவதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் கல்விக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். சைடம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு அமைப்பதை துரிதப்படுத்தவேண்டும். புதிய மாணவர்கள் உள்வாங்கப்படுவதை நிறுத்த வேண்டும். மருத்துவ கல்லூரியொன்றின் குறைந்தபட்ச தகைமைகள் வரையறுக்கப்பட்டு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட வேண்டும் என்பனவும் ஜனாதிபதிக்கான முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.- என்றார்.

## கிழக்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அத்தியாவசியமானது என்று அமைச்சர் றிஷாட் பதியுதீன் வலியுறுத்தினார்.

மூதூரில் சதொச கிளையை திறந்து வைத்தபின்னர் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் றிஷாட் உரையாற்றினார்.

பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூபின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதூர் நத்துவத்துல் உலமா அரபுக்கல்லூரி அதிபர் எம்.எம். கரீம் மௌலவி, பிரதியமைச்சர் அமீர் அலி, இஷாக் எம்.பி. டொக்டர் ஹில்மி மஹ்ரூப், டாக்டர் ஷாபி, உட்பட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று இருந்தனர்.

அமைச்சர் உரையாற்றிய போது கூறியதாவது,

நமது நாட்டிலே வடக்கு கிழக்குக்கு வெளியேதான் முஸ்லிம்கள் அதிகமாக வாழ்கின்றபோதும் அவர்கள் பல்வேறு பிரதேசங்களில் சிதறியும் பரம்பலாகவும் வாழ்வதனால் அரசியலிலே எதுவித தாக்கமும் செலுத்தமுடியாதவர்களாக இருக்கின்றனர். கிழக்குமாகாணத்தில் மாத்திரமே முஸ்லிம்கள் செறிவாகவும் நிலத்தொடர்புடைய அமைவிடத்திலும் வாழ்ந்துவருவதால் அவர்கள் பெரிய அரசியல் சக்தியாக உருவெடுப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் இருக்கின்றன. கிழக்குமாகாண ஆட்சி முஸ்லிம்களின் கைவசம் வந்தால் நாட்டில் உள்ள ஏனைய முஸ்லிம்களின் சமூக,பொருளாதார,கலாசார பாதுகாப்பு விடயங்களை கவனிப்பதற்கு அது வழிகோலும்.

வடக்கிலும் கிழக்கிலும் கொழும்பிலும் கண்டியிலும் முஸ்லிம்களின் நலன்களை கவனிக்க அந்தந்த பகுதியை பிரதிநிதித்துவப்படும் எம்.பிக்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசபை உறுப்பினர்கள் எனப்பலர் இருக்கின்றனர் ஆனால் அநேகமான கிராமங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் பிரத்தியேகத்தேவைகளைக்கவனிக்க,பிரதேசபை உறுப்பினர் ஒருவர்தானும் இல்லாத துர்ப்பாக்கிய நிலையை நாம் காண்கின்றோம்.

அந்தப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் ஆங்காங்கே சிதறிவாழ்வதால் அவர்கள் தமக்கென சிறிய அரசியல் அதிகாரத்தையேனும் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக, ஏனையவர்களில் தங்கி வாழ்வபர்களாக இருக்கின்றனர். முஸ்லிம் அரசியல்வாதிகளும் இவர்களின் நலன்களை கவனிக்காத நிலை இருப்பதனால், அந்த மக்கள் பார்ப்பாரும் கேட்பாரும் அற்றவர்களாக பரிதவித்து வாழ்கின்றனர். தமது ஒரு சிறிய பிரச்சினையைத்தீர்ப்பதற்குகூட மாற்றாரின் உதவியை நாடவேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

எனவேதான் கிழக்குமாகாண அதிகாரத்தை நம்வசப்படுத்துவதன் மூலம் இலங்கைவாழ் முஸ்லிம்களின் தேவைகளை நிவர்த்திப்பதற்கான மையமாக அதனை மாற்றியமைக்கமுடியும் என நம்புகின்றோம். முஸ்லிம் சமூகத்தை மையப்படுத்தி அரசியல் செய்யும் கட்சிகள் ,அமைப்புகள் , சமூகநலன் சார்ந்த இயக்கங்கள், உலமாக்கள் மற்றும் புத்திஜீவிகள் தமக்கிடையேயான கருத்து பேதங்களை களைந்து,எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் ஓரணியில் போட்டியிடுவதன் மூலமே இது சாத்தியமாகும்.நாம் தான் இந்த சமூகத்தின் காவலர்கள் என்று ஒவ்வொருகட்சிகளும் கூறிக்கொண்டு இருந்தால் ஒற்றுமைக்கு சாத்தியம் இல்லை.

கட்சிஎன்பது மார்க்கமும் அல்ல வேதமும் அல்ல.அது சமூகத்தை வழிகாட்டும் ஓர் இயக்கம். தான் சார்ந்தவர்களின் நலன்களை மட்டும் முன்னெடுக்காது சமூகம் சார்ந்த விடயங்களை முன்னிலைப் படுத்தவேண்டும். வாக்குகளை பெற்றுக் கொண்டபின்னர் மக்களின் தேவைகளை நிவர்த்திக்காது இருப்பது ஆரோக்கியமானது அல்ல.கட்சியை மார்க்கமாக நம்பியதனால் நாம் படுகின்ற பாடுகள் நமது கண் முன்னே வந்து நிற்கின்றது. மூதூரிலே குன்றும் குழியுமாக கிடக்கின்ற வீதிகள் கட்சியை மார்க்கமெனக்கருதி காலா காலமாக வாக்குகளை வாரி வழங்கிவரும் நமது மக்களுக்கு நல்லதோர் படிப்பினையாக இருக்கின்றது என்றும் அமைச்சர் கூறினார்.

## கொழும்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.மரிக்கார் கூறினார்.

கொலன்னாவை குப்பை பிரச்சினை சம்பந்தமாக மகாசங்கத்தினருடன் இணைந்து கொலன்னாவையில் நடத்திய விஷேட ஊடகவியலாளர் மாநாட்டில் பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொழும்பு மாநகர சபையால் தினசரி சேகரிக்கப்படும் குப்பை கடந்த பல வருடங்களாக தினமும் கொலன்னாவை மீத்தொடமுல்லை பிரதேசத்தில் கொட்டப்படுகின்றது. இதனால் கொலன்னாவை பகுதி மக்களின் சுகாதாரம் உட்பட அன்றாட வாழ்வு முறை பாரிய பாதிப்பை சந்தித்துள்ளது. தற்போது இந்த குப்பை மேடு 180 அடி உயரமாக உள்ளது. மூன்று மில்லியன் தொன் குப்பைகள் அங்கு காணப்படுகின்றன. கொழும்பில் சேகரிக்கப்படும் 700 முதல் 900 தொன் வரையான குப்பைகள் தினசரி இங்கு கொட்டப்படுகின்றன. இதனால் கொலன்னாவை மக்களாகிய நாங்கள் தான் பாரிய பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றோம். வேறு யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்தத் துன்பங்களை இனிமேலும் எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. காட்டுக்குள் இருக்கும் மிருகங்களை விட மோசமான நிலைக்கு இந்தப் பிரதேச மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது பற்றி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே கூறியுள்ளோம். இந்தக் குப்பைகளை மீள் சுற்றில் பயன்படுத்துவதற்குரிய திட்டம் தாமதமாகுமானால் பரவாயில்லை. ஆனால் கொலன்னாவையில் இனிமேல் குப்பைகளைக் கொட்ட முடியாது. கொட்டவும் கூடாது. ஏகலயில் உள்ள ஒரு இடத்தில் மக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இன்றி குப்பைகளை கொட்டுவதற்கான ஒரு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதிப் பத்திரமும் இதற்கு வழங்கப்பட்டள்ளது. யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இந்த இடத்தில் குப்பைகளைக் கொட்டலாம். ஆனால் இன்னமும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது.

இந்தப் பிரதேசத்தின் பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் ஒன்றைத் தெளிவாகக் கூறிக் கொள்கின்றேன். கொழும்பு மாநகர சபைக்கு அடுத்த மாதம் முதல் இங்கு குப்பைகளை கொட்ட நாம் இடமளிக்க மாட்டோம். இந்த விடயத்தில் முடியுமானவரைக்கும் பொறுமை காத்து இப்போது சிவப்புக் கோட்டையும் தாண்டி விட்டோம். இனிமேல் இந்த விடயத்தில் பொறுமை காக்க முடியாது. அரசியலை ஒருபுறம் வைத்து விட்டு பிரதேச மக்களோடும் மகாசங்கத்தினரோடும் இணைந்து நாம் உறுதியான ஒரு முடிவுக்கு வருவோம். நாள் முழுவதும் இந்த குப்பைகளோடு கொலன்னாவ பகுதி மக்களால் எப்படி வாழ முடியும். அவர்களால் சுவாசிக்க கூட முடியாத நிலைக்கு அவர்கள் வந்துள்ளனர். இது வரை சுவாசிக்கும் உரிமை கூட மறுக்கப்பட்ட அந்த மக்களுக்கு மீண்டும் அதைப் பெற்றுக் கொடுப்பதுதான் எமது நல்லாட்சி. நாம் வீதிக்கு இறங்கினால் அது மற்றவர்கள் வீதியில் இறங்குவதைப் போல் இருக்காது என்பதை தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.




# சச்சின் திரைப்படம் மே 26இல் ரிலீஸ்




இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் சச்சின் ஒரு பில்லியன் கனவுகள் (Sachin A Billion Dreams) திரைப்படம் எதிர்வரும் மே மாதம் 26ஆம் திகதி வெளியாகவுள்ளது. இந்த தகவலை நேற்றுமுன்தினம் சச்சின் டெண்டுல்கர் தனது டுவிட்டரில் வெளிப்படுத்தியுள்ளார்.

ஒவ்வொருவரும் என்னிடம் கேட்கும் கேள்விகளுக்கான பதில் இதில் உள்ளது. உங்களுடைய நாட்காட்டியில் மே 26ஆம் திகதியை குறித்து வைத்துக் கொள்ளுங்கள் என்பதாக சச்சினின் டுவிட்டர் பதிவு அமைந்திருந்தது. இந்திய கிரிக்கெட் அணியின் லிட்டில் மாஸ்டர் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் தனது 16 வயதில் கடந்த 1989ஆம் ஆண்டு பாகிஸ்தானுடனான போட்டியில் அறிமுகமானார். ஒருநாள் கிரிக்கெட்டில் இரட்டை சதம் அடித்த முதல் வீரர், ஒருநாள் மற்றும் டெஸ்ட் கிரிக்கெட்டில் 100 சதங்கள் அடித்த சாதனை வீரர் என்ற பல்வேறு சாதனைகளுடன் தனது கிரிக்கெட் வாழ்க்கையை நகர்த்திச் சென்ற சச்சின், 2013 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். சுமார் 24 வருட கால அவரது வாழ்க்கை வரலாற்றை மையமாக கொண்டு சச்சின் ஒரு பில்லியன் கனவு (Sachin A Billion Dreams) என்ற திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திரைப்படத்தின் முதல் போஸ்டர் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியாகியிருந்த நிலையில், எதிர்வரும் மே மாதம் 26 ஆம் திகதி திரைப்படம் வெளியாகும் என சச்சின் டெண்டுல்கர் தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

### சூதாட்ட சர்ச்சை எதிரொலி:

# மற்றுமொரு பாக். வீரருக்கு தற்காலிக போட்டித் தடை



கடந்த 9ஆம் திகதி டுபாயில் ஆரம்பமான 2ஆவது பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடிகள் குறித்த விசாரணைகளின் அடிப்படையில் பாகிஸ்தான் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் நசீர் ஜம்ஷீட்டிற்கு தற்காலிக போட்டித்தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் தற்காலிக தடை விதிக்கப்படும் மூன்றாவது வீரர் இவராவார். இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கையில், ஊழல் எதிர்ப்பு விதிமுறைகளை மீறியமைக்காக நசீர் ஜம்ஷீட் அனைத்துவிதமாக கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் தற்காலிக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொடரில் இஸ்லாமாபாத் யுனைடெட் அணியில் விளையாட ஒப்பந்தமான வேகப்பந்துவீச்சாளரான மொஹமட் இர்பான், தற்போது முறைகேடு தொடர்பான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் எனவும் தெரிய வருகின்றது.

முன்னதாக இஸ்லாமாபாத் யுனைடெட் அணி வீரர்களான சர்ஜீல் கான் மற்றும் காலித் லத்தீப் ஆகியோரும் இதே குற்றச்சாட்டில் இடைநீக்கம் செய்யப்பட்டு பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பிவைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர்களின் வெளியேற்றத்திற்கும் நசீர் ஜம்ஷித்தின் போட்டித் தடைக்கும் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக கருதப்படுகின்றது. ஆனால், என்ன காரணத்திற்காக நஸிருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து இன்னும் உறுதியாகத் தெரிவிக்கப்படவில்லை.

எனினும் இம்முறை பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் நசீர் ஜம்ஷீட் விளையாடவில்லை. 27 வயதான அவர், 2015ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்காக இறுதியாக விளையாடியுள்ள நிலையில், இதுவரை 2 டெஸ்ட், 68 ஒருநாள் மற்றும் 18 டி20 போட்டிகளில் விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இடது கை துடுப்பாட்ட வீரரான ஜம்ஷீத், இறுதியாக பாகிஸ்தான் அணிக்காக 2015ஆண்டு நடைபெற்ற 50 ஓவர்கள் உலகக்கிண்ணப் போட்டிகளில் பிரசன்னமாகியிருந்தார். எனினும், அத்தொடரில் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தாத காரணத்தினால், பாகிஸ்தான் அணியின் குழாத்தில் தனக்கு இருந்த வாய்ப்பை அவர் இழந்தார்.





பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது. இதில் சம்பியனான எம் நஸ்கான் ஆசிரியர் தலைமையிலான சபா இல்லம் 397 புள்ளிகளையும் பெற்று முதலாம் இடத்தையும், அரபா இல்லம் 290 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும், மினா இல்லம் 285 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. படத்தில் சபா இல்லப் பொறுப்பாசிரியரும், மாணவரும் வெற்றிக்கிண்ணத்தைத் பெற்றுக்கொள்வதையும் காணலாம்.
(பள்ளிவாசல்துறை எஸ் ஐ எம் அம்ஜத்)

# ஐ.பி.எல் ஏலத்தில் 351 வீரர்கள்

10ஆவது இந்தியன் பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் போட்டிக்கான இறுதி ஏலப்பட்டியலில் 351 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். 10ஆவது ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் போட்டி ஏப்ரல் 5ஆம் திகதி முதல் மே 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 20ஆம் திகதி பெங்களூரில் நடைபெறவுள்ளது. அத்துடன் இம்முறை ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்க 799 வீரர்கள் பதிவு செய்து இருந்தனர். இதில் எந்தெந்த வீரர்களை ஏலத்துக்கு தகுதி உடையவர்கள் என்று ஆராயப்பட்டது. அதன்படி இறுதி ஏலப்பட்டியலில் 351 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் 122 வெளிநாட்டு வீரர்கள் அடங்குவர். 24 இந்திய வீரர்கள் இடம்பெற்றுள்ளார்கள். இஷாந்த் சர்மா, இயென் மோர்கன், பென் ஸ்டோக்ஸ், கிறிஸ் வோக்ஸ், எஞ்சலோ மெத்யூஸ், பெட் கம்மின்ஸ், மிட்செல் ஜோன்சன் போன்ற வீரர்களுக்கு அதிகபட்சமாக ரூ.2 கோடி அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

8 அணிகளும் சேர்ந்து மொத்தம் 79 வீரர்களை ஏலத்தில் எடுக்கிறார்கள். இதற்காக 351 வீரர்கள் ஏலத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மகளிர் உலகக்கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# சுப்பர் சிக்ஸ் சுற்று இன்று ஆரம்பம்



பீ.எப்.எம் றிஷாட்

கொழும்பில் நடைபெற்றுவரும் பத்து நாடுகளுக்கு இடையிலான மகளிர் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளின் முதல் சுற்றின் இறுதிப் போட்டிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றதுடன், இதில் இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தத்தமது போட்டிகளில் வெற்றி பெற்று சுப்பர் 6 சுற்றுக்குத் தகுதி பெற்றன.

இந்நிலையில், இன்று முதல் ஆரம்பமாகவுள்ள சுப்பர் சிக்ஸ் சுற்றுப் போட்டிகளில் புள்ளிகள் அடிப்படையில் முதல் நான்கு இடங்களைப் பெற்றுக்கொள்ளும் அணிகள் எதிர்வரும் ஜுலை மாதம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு நேரடியாகத் தகுதியைப் பெற்றுக் கொள்ளவுள்ளன.

ஏ குழுவில் இடம்பெற்ற இந்திய அணி பங்குபற்றிய அனைத்து லீக் போட்டிகளிலும் வெற்றிபெற்று அப்பிரிவில் முதலிடத்தைப் பெற்றுக் கொள்ள இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகள் அப்பிரிவில் 2 மற்றும் 3ஆவது இடங்களைப் பெற்றுக்கொண்டு சுப்பர் 6 சுற்றுக்குத் தகுதிபெற்றன. எனினும் அப்பிரிவில் இடம்பெற்ற சிம்பாப்வே மற்றும் தாய்லாந்து மகளிர் அணிகள் போட்டித் தொடரிலிருந்து வெளியேறின. அதேபோல பி பிரிவில் இடம்பெற்ற தென்னாபிரிக்க அணி பங்குபற்றிய அனைத்து லீக் போட்டிகளிலும் வெற்றிபெற்று அப்பிரிவில் முதலிடத்தைப் பெற்றுக்கொள்ள, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் அடுத்த 2 இடங்களைப் பெற்று சுப்பர் 6 சுற்றுக்குத் தெரிவாகின. எனினும், போட்டித் தொடரில் முதற்தடவையாக பங்குபற்றிய பப்புவா நியூகியா மற்றும் ஸ்கொட்லாந்து மகளிர் அணிகள் தொடரிலிருந்து வெளியேறின.

இதேவேளை, இன்று ஆரம்பமாகவுள்ள சுப்பர் 6 போட்டிகளில் இந்தியா மற்றும் தென்னாபிரிக்க மகளிர் அணிகளுக்கிடையிலான போட்டி பி.சரவணமுத்து மைதானத்திலும், இலங்கை மற்றும் பாகிஸ்தான் மகளிர் அணிகளுக்கிடையிலான போட்டி கொழும்பு என்.சி.சி மைதானத்திலும், பங்களாதேஷ் மற்றும் அயர்லாந்து மகளிர் அணிகளுக்கிடையிலான போட்டி சி.சி.சி மைதானத்திலும் நடைபெறவுள்ளதுடன், அடுத்த கட்டப் போட்டிகள் எதிர்வரும் 17 மற்றும் 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கழகமட்ட பிரீமியர் லீக் கால்பந்தில் கெலிஓயா எப்.சி. கழகம் சம்பியன்



எம்.எம்.எம். ரம்ஸீன்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய கால்பந்தாட்ட கழகங்களுக்கிடையிலான பிரீமியர் லீக் பிரிவு 2 இற்கான இறுதிப் போட்டியில் கெலிஓயா எப்.சி. கழகம் கொழும்பு ரட்ணம் கழகத்தை 3-1 என்ற கோல்கள் வித்தியாசத்தில் தேற்கடித்து சம்பியனாகியது.

இப்போட்டி முடிவில் கெலிஓயா எப்.சி. கழகம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து கழக வீரர்களும் ஆதரவாளர்களும் மைதானத்தில் அல்லாஹு அக்பர் என்றுகோசம் எழுப்பி வெற்றிக் களிப்பை வெளிப்படுத்தினர்.

நாவலப்பிட்டி ஜயதிலக விளையாட்டரங்கில் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் சம்பியனாகிய கெலிஓயா எப்.சி. கழகத்தற்கு இரண்டு இலட்சம் ரூபா ரொக்கப் பணமும் சம்பியன் கிண்ணமும் ரட்ணம் கழகத்திற்கு ஒரு இலட்சம் ஒரு ரொக்கப்பணமும் வழங்கப்பட்டன. இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் நாடளாவிய ரீதியில் கழகங்களுக்கிடையில் நொக் அவுட் மற்றும் லீக் அடிப்படையில் நடாத்திய இச் சுற்றுப் போட்டியில் 82 கழகங்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் கெலிஓயா எப்.சி. கழகம் பிரியமியர் லீக் பிரிவு 1 இல் விளையாடும் தகுதியைப் பெற்று முதல் தர கழகங்களில் ஒன்றாகத் தெரிவாகியுள்ளது. இதில் சம்பியனாகிய கெலிஓயா எப்.சி. கழகத்திற்கு கம்பளை, கெலிஓயா பகுதிகளிலும் கலுகமுவ ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாகவும் ஞாயிற்றுக்கிழமை இரவு பாரிய வரவேற்பு வழங்கப்பட்டது.

# இலங்கை - இங்கிலாந்து லயன்ஸ் பயிற்சிப் போட்டி சமநிலையில்



இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் அணிக்கும், இங்கிலாந்து லயன்ஸ் கழகத்துக்குமிடையே மொறட்டுவையில் நடைபெற்ற 3 நாள் பயிற்சிப் போட்டியில் சமநிலையில் நிறைவடைந்தது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதனையடுத்து தமது முதல் இன்னிங்ஸிற்காக விளையாடிய இங்கிலாந்து லயன்ஸ் கழகத்தினர், சகல விக்கெட்டுக்களையும் இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். பின்னர், 126 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தமது இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 324 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதன்படி 198 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய இங்கிலாந்து லயன்ஸ் கழகம் வெற்றியிலக்கை அடைவதற்கு நெருங்கிய போதிலும் சீரற்ற காலநிலையால் சமநிலையில் நிறைவுக்கு வந்தது.

# அதிகமுறை டக்அவுட் முதலிடத்தில் அக்மல்



பிரபல பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர் உமர் அக்மல், டி20 போட்டிகளில் 24 முறை டக் அவுட் ஆகி டக் அவுட் ஆன வீரர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். பாகிஸ்தான் அணிக்காக சகலதுறை ஆட்டக்காரராகக் களமிறங்கி விளையாடி வந்த 26 வயதான உமர் அக்மல், 24 முறை டக் அவுட் ஆகியுள்ளார். தற்போது டுபாயில் நடைபெற்றுவரும் பாகிஸ்தான் சுப்பர் லீக் டி20 கிரிக்கெட் தொடரில் அவர் இந்த சாதனையைப் படைத்தார். இதில் லாகூர் குவாலண்டர்ஸ் அணிக்காக உமர் அக்மல் விளையாடி வருகிறார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெஷாவர் ஷல்மி அணிக்கெதிரான போட்டியில் உமர் அக்மல் டக் அவுட் ஆனார். இந்த ஆட்டமிழப்பு மூலம் உமர் அக்மல் 24ஆவது முறையாக டக் அவுட்டாகி சர்வதேச அளவில் முதல் இடம்பிடித்துள்ளார். இதற்கு முன் தென்னாபிரிக்க அணியின் கிப்ஸ், இலங்கையின் திலகரத்ன டில்ஷான், மேற்கிந்திய தீவுகள் வீரர் டுவைன் ஸ்மித் ஆகியோர் 23 முறை டக்அவுட் ஆகி இந்த மோசமான சாதனையில் முன்னிலையில் இருந்தனர். தற்போது உமர் அக்மல் அவர்களை முறியடித்துள்ளார்.

# அவுஸ்திரேலிய டெஸ்ட்: இந்திய அணி அறிவிப்பு

அவுஸ்திரேலிய அணியுடனான முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் நிறைவடைந்த பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் போட்டியில் இடம்பெற்ற இத்தொடரில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மும்பையில் நேற்று நடைபெற்ற தேர்வுக்குழுக் கூட்டத்தில் 16 பேர் கொண்ட இந்திய அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. காயத்திலிருந்து குணமடைந்துள்ள ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரோஹித் ஷர்மா மற்றும் சுழற்பந்துவீச்சாளர் அமித் மிஸ்ரா ஆகியோர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அத்துடன் உபாதைக்குள்ளாகியுள்ள வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் ஷமிக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. இந்திய சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அவுஸ்திரேலியா அணி போர்டர்-கவாஸ்கர் கிண்ணத்துக்கான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் விளையாடவுள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி புனேயில் எதிர்வரும் 23 ஆம் திகதி புனேயில் ஆரம்பமாகவுள்ளன.







நீர்கொழும்பு அல் ஹிலால் மத்திய கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை(09)கல்லூரி மைதானத்தில் அதிபர் எம்.இர்ஸாட் தலைமையில் நடைபெற்றது. இதில் பரகத் இல்லம் முதலாமிடத்தையும், ஹிக்மத் இல்லம் இரண்டாம் இடத்தையும், இஸ்ஸத் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றதுடன், ரஹ்மத் இல்லம் நான்காம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. இந் நிகழ்வின் சிறப்பு அதிதியாக ஷாபி ரஹீம், ஜே.ரொய்ஸ் விஜித பெர்னான்டோ, எம்.எஸ்.எம்.சகாவுல்லா மற்றும் பிரதம அதிதியாக க.ஸ்ரீலல் நோநிஸ், கௌரவ அதிதிகளாக திருமதி ஆ. வஸீர்தீன், சீ.உதயகுமார், ஆ.இ.க. பெர்னான்டோ, எ.அ.அ.மைக்கல் ஆகியோர் கலந்துகொண்டனர். இதேவேளை பெண் மாணவிகளுக்கான பிரத்தியேகமான போட்டிகள் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்றது. நீர்கொழும்பு அல் ஹிலால் மத்திய கல்லூரி வரலாற்றில் கடந்த 8 வருடகாலமாக பரகத் இல்லம் முதல் இடத்தை தக்கவைத்துக்கொண்டு இம்முறையும் முதலாவது இடத்தைப் பெற்று 9ஆவது முறையாக வெற்றி கொண்டமை விசேட அம்சமாகும். (நீர்கொழும்பு முஸாதிக் முஜீப்)

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 15TH FEBRUARY 2017